Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1303)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 02 (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 331

# தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு கிளிநொச்சியில் பாராட்டு விழா!

பிரிட்டன் புறோமில் நகரில் நடைபெற்ற 8 ஆவது தமிழர் விளையாட்டு விழாவில் பங்குபற்றி, சகல போட்டிகளிலும் வெற்றிகளை ஈட்டிய தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு நேற்று கிளிநொச்சியில் பாராட்டு விழா நடைபெற்றது.

கடந்த யூலை 20 ஆம் திகதி பிரிட்டனுக்கு புறப்பட்ட இந்தஅணி, அங்கு பங்குபற்றிய சகல போட்டிகளிலும் வெற்றியீட்டி நேற்று தாயகம் திரும்பியது. இவ்அணியினர் - கிளிநொச்சி மத்திய விளையாட்ட ரங்கிலிருந்து மாணவரமைப்பின் பாண்ட் அணிவகுப்பு மரியாதையுடன் பாராட்டுவிழா நடைபெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இப்பாராட்டு விழா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை சோதியா படையணி தளபதி கேணல் துர்க்கா, தளபதி கேணல் பானு ஆகியோர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை மாலதி படையணித் தளபதி கேணல் விதுசா ஏற்றி வைத்தார்.

பாராட்டுரைகளை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர்வாக பொறுப்பாளர் பரா, அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், மகளிர் துணைப் பொறுப்பாளர் கீதா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவசாமி ஆகியோர் நிகழ்த்தினர்.

இவ்வலைப்பந்தாட்ட அணியில் யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார், ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றினர்.



தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு கிளிநொச்சியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் - அவ்வணியின் வீராங்கனைகள்.

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது!

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினை குறித்து பொது இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதென்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதென்று அந்த ஆணைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்தகட்டப் பேச்சுக்கள் இறுக்கமாகவே அமையும்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அடுத்தகட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் இறுக்கமானதாகவும், முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை உள்ளடக்கியதாகவும் அமையுமென்று - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்து வெளியிடுகையில் -

இதுதவிர ஆறு சுற்று சமாதானப் பேச்சுக்கள் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இடம் பெற்றுள்ளன. இந்தப் பேச்சுக்கள் சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் அமைந்தன.

ஆனால், தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்போது, பல்வேறு நெருக்கடிகள் உருவாகலாமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

தற்காலிக பின்னடைவுகள, இறுக்கமான சூழ்நிலைகள் என்பவற்றை இந்தச் சமாதானப் பேச்சுக்கள் எதிர் கொள்ளவேண்டிய சூழல் ஏற்படலாமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளின் குழுவினர் சுவிஸிற்கு சென்றனர்

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், நேற்று பிரான்சில் இருந்து சுவிஸிற்குப் பயணமாகினர்.

இம்மாதம் 19 ஆம் திகதி வன்னியில் இருந்து புறப்பட்ட இந்தக் குழுவினர், பிரான்சுக்கு பயணமானார்கள். அங்கு கடந்த 23 ஆம் திகதிதொடக்கம் 26 ஆம் திகதிவரை இடைக்கால நிர்வாகம் குறித்த சட்ட ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்பின்னர் நேற்று சுவிற்ஸர்லாந்துக்குப் பயணமாகி, இன்று மாலை 4 மணிக்கு அந்நாட்டுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். செப்டெம்பர் 3 ஆம் திகதி இக்குழுவினர் வன்னி திரும்பவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## உருத்திரகுமாரன் கைதுசெய்யப்படலாம்; செய்திக்கு அமெரிக்க அதிகாரி மறுப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன், அமெரிக்கா திரும்பும்பொழுது கைது செய்யப்பட வாய்ப்பு இருப்பதான தகவலை, அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் மறுத்திருக்கிறார்.

புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன் கைதுசெய்யப்படுவார் என்ற செய்தி தொடர்பாக, கருத்து வெளியிட்டிருக்கும் அமெரிக்காவின் தெற்காசிய விவகாரத் துறை அதிகாரி ஜேம்ஸ் - இந்த செய்தியினை மறுத்திருக்கின்றார். அத்துடன், இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட அமெரிக்கா தனது ஆதரவை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

செப்டம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற தாக்குதலையடுத்து அமெரிக்காவின் தேசப்பற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சு.க. - ஜே.வி.பி. கூட்டணி; அடுத்தமாதத்துக்கு முன்னர்!

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் கைச்சாத்திடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மாளிகையில் இரண்டு பகுதியினருக்கும் இடையே நடந்த சந்திப்பின்பின்னர் இந்தக் கருத்து வெளியிடப்பட்டது.

நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களின் எதிர்காலம் சம்பந்தமாக இரண்டு பகுதியினருக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்படாததே இரு பகுதியினருக்கும் இடையிலான ஒப்பந்தம் உருவாக பின்னடைவாக உள்ளதாக ஜே.வி.பியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)


## மன்னார்- மடு வீதியை திறக்க நிபந்தனையுடன் இணக்கம்!

மன்னார் மடு வீதியை, மக்கள் பாவனைக்கு திறந்துவிடுவதற்கு, படையினரை நிபந்தனையுடன் அனுமதிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெல்வ்சனுக்கும் இடையே நடந்த சந்திப்பிலேயே இந்த இணக்கம் ஏற்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இவயின்ரை கூட்டணி பிள்ளையாற்றை கலியாணம் போலத்தான்...

## யாழ்ப்பாணத்திலிருந்து ஜே.வி.பி. பாதயாத்திரை ஆரம்பித்திருக்கலாம்!

### உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

காலியில் இருந்து கொழும்புக்குப் பாதயாத்திரை மேற்கொண்டதிலும் பார்க்க, அந்தப் பாதயாத்திரையை ஜே.வி.பியினர் யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பித்திருக்கலாம் என்று உள்நாட்டு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பாதயாத்திரை இடம்பெற்ற வேளையில் நாம் கண்ணீர்ப் புகைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# தமிழ்மக்களின் தனி அரசு ஆணையை டிக்ஷித் அறிந்து கொள்ளவில்லையா?

(நேற்றைய தொடர்ச்சி....)

இதேசமயம் தமிழ் இளைஞர்கள்- அரச படையினரால் கைது செய்யப்படுவதும், சித்திரவதைக்குள்ளாவதும் தொடர்ந்தது. வடக்கிலும், கிழக்கிலும் அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

இந்தநிலையில்தான், தமிழ் இளைஞர்கள் தம்மையும், தமது மக்களையும், தமது மண்ணையும் பாதுகாப்பதற்கு ஆயுதம் ஏந்தினார்கள். ஜனநாயகமுறை இலங்கையின் பெரும்பான்மை இனத்துக்கே வெற்றி தருகின்றதென்பதை, தமிழ் இளைஞர்கள் புரிந்துகொண்டனர். சாத்வீகப் போராட்டம் - ஆயுதபலம் பெற்ற அரசுக்கே சாதகமாக இருப்பதை தமிழ் இளைஞர்கள் உணர்ந்தனர்.

இணைப்பாட்சி என்ற சமஷ்டி அமைப்பை, பிரிவினை என்று பெரும்பான்மையினர் கூறி, தமிழின அழிப்பில் ஈடுபடுவதால், தமிழ் இனத்தைப் பாதுகாப்பதற்கு அவர்கள் 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கிய "இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்பதற்கு" தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னால், தமிழ் இளைஞர்கள் அணி திரண்டனர்.

இந்த வரலாறு இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என். டிக்ஷித்துக்குத் தெரியவில்லை. இது கொழும்பிலிருக்கும் கதிர்காமரும்கூட அறிந்திருக்காததுதான் ஆச்சரியம்.

இது மட்டுமல்ல, 1971 ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் நடந்த பொதுத் தேர்தலில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான அவாமிக் கட்சிக்கு, கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் அமோக ஆதரவளித்துத் தெரிவு செய்தனர். ஆனால, மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியாளர்களும், பாகிஸ்தான் இராணுவமும் இதை ஏற்றுக்கொள்ளாமல், ஷேக் முஜிபுரைச் சிறைப்பிடித்தனர். கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் மீது- அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். பாகிஸ்தான் ஆட்சியாளர்களினதும், இராணுவத்தினரதும் அட்டூழியங்கள் தாங்கமுடியாது, ஒருகோடி கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் - இந்தியாவுக்குள் அகதிகளாகத் தஞ்சம்புகுந்தனர்.

இந்தநிலையில், கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்குத் தீர்வுகாண உதவுமாறு அன்றைய இந்தியப்பிரதமர்- உலக நாடுகளுக்கும், வல்லரசுகளும் வேண்டுகோள் விடுத்தார். வல்லரசுகளும், உலகநாடுகளும் - அகதிகளுக்கு உதவமுன்வந்தன. அகதிகளுக்கு உதவி தேவையில்லை. கிழக்குப் பாகிஸ்தான் பிரச்சினைக்குத் அரசியல் தீர்வுதான் தேவை என்றார் இந்திரா. வல்லரசுகள் இதற்கு உதவ முன்வரவில்லை.

இந்திரா நடவடிக்கை எடுத்தார். இந்திய இராணுவம் கிழக்குப் பாகிஸ்தானுள் நுழைந்தது. கிழக்குப் பாகிஸ்தான் - வங்காளதேசமாக மலர்ந்தது.

இந்த வரலாறு டிக்ஷித்துக்கு மறந்து போய்விட்டதா? கதிர்காமர் அறிந்து கொள்ளவில்லையா?

விடுதலைப்புலிகள் புதிதாகத் தனிராஜ்யம் கோருவதாக டிக்ஷித் கூறியதும், புலிகள் நாட்டைப்பிரிக்க முனைகிறார்கள் என்று கதிர்காமர் சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறதா?


1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிங்களத்தை அரியணையில் ஏற்றுவதற்கு, பண்டார நாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணியும். சேர்.ஜோனின் ஐக்கிய தேசியக் கட்சியும் - சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக இருக்கும் என்று பிரசாரம் செய்த வேளையில், இலங்கைத் தமிழரசுக்கட்சி - சமஷ்டி அமைப்பதுடன், சிங்களத்துடன் தமிழுக்கு சம அந்தஸ்த்து கோரிப் பிரசாரம் செய்தது. ஜி.ஜி.பொன்னம்பலத்தின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸும், அடங்காத்தமிழன் செ.சுந்தரலிங்கமும், இடதுசாரிக கட்சிகளும் - சிங்களத்துடன் தமிழுக்குச் சம அந்தஸ்த்துக்கோரிப் பிரசாரம் செய்தன. வடக்கு - கிழக்குத் தாயகத்தமிழ் மக்கள்- இலஙகைத் தமிழ் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பொன். கந்தையா, தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் உட்பட, தமிழரசுக்கட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்து, சிங்களம் மட்டுமே ஆட்சி மொழிக் கோரிக்கையை நிராகரித்தனர்.

ஆனால், நாடாளுமன்றத்தில் வடக்கு - கிழக்குத் தாயகத் தமிழர்களின் கோரிக்கையை நிராகரித்து, பெருபான்மை ஜனநாயகம் - சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்று நிறைவேற்றியது.

இலங்கையில் தமிழ் மக்களின் ஜனநாயகம- பெரும்பான்மை ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்டது.

இதன்பின், 1970 ஆம் ஆண்டில் இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனபபடுத்தும் புதிய அரசியமைப்பை உருவாக்கும்போது, தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்கக் கூடிய அடிப்படைப் பிரேரணைகள்- தமிழ் மக்களின சார்பில் இலங்கைத் தமிழர சுக்கட்சியால் அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இவை விவாகத்திற்குக் எடுத்துக் கொள்ளப்படாமலே நிராகரிக்கப்பட்டன.

இங்கும் தமிழ்மக்களின் ஜனநாயக. உரிமை - பெரும்பான்மை ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்



டது.

இதன்பின் 1978 ஆம் ஆண்டில் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாவதற்கு, புதிய அரசியல் யாப்பைத் தமிழ் மக்களின் சம்மதம் பெறாமலேயே நிறைவேற்றினர்.

இப்போதும் பெரும்பான்மை ஜனநாயகமே வெற்றிபெற்றது.

இதன்பின்னர், தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட அராஜகத்தினால்- உயிர், உடமை இழந்த தமிழ்மக்கள், அல்லப்பட்டு அழுது நின்றபோது, எந்த ஜனநாயகம் தமிழரைக் காப்பாற்றியது.

இந்தநிலையில், தமிழ் இளைஞர்கள் - பிரபாகரன் தலைமையில் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்காமல் இருந்திருந்தால், இங்கு ஒரு தமிழனாவது எஞ்சியிருப்பானா?

இப்போது "இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைக்க விடுதலைப்புலிகள் முன்வந்திருப்பதில் என்னதவறு?

டிக்ஷித்துக்குத் இது தெரியாதது வியப்பல்ல. கதிர்காமருக்கும் தெரியவில்லையே.

யாருக்குத் தெரிந்தாலென்ன, தெரியாவிட்டாலென்ன, அஞ்சி அஞ்சி வாழ்ந்த தமிழன்- இன்று அஞ்சாமலே நடமாடுவது, யாரால் என்பது தமிழ்மக்களுக்குத் தெரியும். நாளை அவன் சுதந்திரமாகத்தான் திரிவான்.

(முற்றும்)

**கோபு**

**நிறஞ்சனாஸ்** சங்கானை
சரத்குமார், சிம்ரன் நடித்த
**அரசு**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
**THE PEACE KEEPER**
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு
சித்தார்த், ஹரிணி, விவேக் நடித்த
**பாய்ஸ்**

காட்சிநேரம்
10.30, 2.30, 6.30.9.30 (பு.நே)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

குட்வில்
**அரிசி ஆலை இயந்திரம்**
உலகிலேயே மிகச் சிறந்த அரிசி உற்பத்தி நாடான சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது
SB - 5 (500-600 கிலோ ஒரு மணித்தியாலத்திற்கு) SB - 10 (900- 1200 கிலோ ஒரு மணித்தியாலத்திற்கு)
Rs.99,000/-இற்கு மேல்

மின்சாரம்
தொழிலாளர்வலு
இடவசதி

முழுமையாக்கப்பட்ட ஒரு அலகு
ஒரு மோட்டோர்
வியப்புறும் செயற்பாடு
நெல் குற்றல் - அரிசி தீட்டல் - கல் நீக்கல் ஆகியவை ஒரே நேரத்தில்!
உதிரிப்பாகங்கள் (ரபர் சக்கரம் SB5 ரூ. 755 / - வீதம் SB10 ரூ.1875 / - வீதம்) உண்டு
தாமதியாதீர்! இப்போதே விரையுங்கள்! ஒருஅரிசி ஆலையின் உரிமையாளராகுங்கள்!
AMT
மேலும் விபரங்களுக்கு -
இருபாலைச் சந்தி, கோப்பாய்,யாழ்ப்பாணம்
021 222 5784
GUDWIL
இறக்குமதியாளர்
55, துட்டகெமுனுவிதி, பாமன்கடை
தொ.பே. 01 - 2818416
தொலைநகல்: 01 - 2818416.
மொபைல் 0777 351695

# பிரமுக வங்கியிலிருந்து போலி வவுச்சர்கள்!

## பொலிஸ் விசாரணை தீவிரம்

கொழும்பு பிரமுக வங்கியிலிருந்து போலியாகத் தயாரிக்கப்பட்டு, காசு பெறப்பட்ட பல வவுச்சர்களை - குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

நீதிமன்றத்தின் அனுமதியின் பின்பே, பிரமுக வங்கியை சோதனையிட்ட பொலிஸார் - இந்த வவுச்சர்களைக் கண்டுபிடித்தனர்.

இது சம்பந்தமாகப் பிரமுக வங்கியில் கடமைபுரியும் பல அதிகாரிகளை - பொலிஸார் விசாரணை செய்துள்ளனர்.

பிரமுக வங்கியில் ஊழல்கள்கள் இடம்பெற்றதாக, மத்திய வங்கியினால் மூடப்பட்டு, பின்பு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வங்கி செயற்படலாம் என்று அறிவித்த பின்பே, பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது, இந்த வவுச்சர்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

# கடற்படைக்கு கலங்கள் கொள்வனவு; பொறுப்பு திறைசேரி செயலாளரிடம்!

கடற்படைக்கு அதிவேக தாக்குதல் கலங்கள் கொள்வனவு செய்வது தொடர்பான மீளாய்வு ஒன்றைச் செய்வதற்கு, கடந்த திங்கட்கிழமை நிதி அமைச்சர் கே.என். சொக்ஸியின் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அதிவேகத் தாக்குதல் கப்பல்கள் வாங்குவதற்கான பொறுப்பை - திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்தயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இஸ்ரேலிடமிருநது கப்பல்களை வாங்குவது தொடர்பான விண்ணப்பங்கள், அமைச்சின் பரிசீலனைக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'தொழில்நுட்ப பரிசோதனைக் குழு' ஒன்றை முதலில் உருவாக்கி, கொள்வனவு செய்யவுள்ள கலங்களின் தரத்தைப் பரிசோதிக்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த தொழில்நுட்ப பரிசோதனைக்குழு - பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவினால் உருவாக்கப்பட்டிருந்தது.

காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன- இலங்கைக்கு அப்படிப்பட்ட கலங்கள் பொருத்தமற்றது எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

எனினும், பாதுகாப்பு செயலாளரும், கடற்படைத்தளபதியும் இவற்றை வாங்குவது குறித்துப் பரிசீலிக்கவுள்ளனர்.

கடற்படையினர் - அமெரிக்க தயாரிப்புகளையும், இஸ்ரேலிய தயாரிப்புகளையும் வாங்குவதற்குச் சம்மதம் தெரிவித்தனர். ஆனால், அரசாங்கம்- எவ்வித விண்ணப்பங்களையும் கோராமல், நேரடியாக இதனை வாங்குவதற்கும், தேவை ஏற்படும் போது உடன் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கும் தீர்மானித்திருக்கிறது.

## ஊவா மாகாணசபையின் நிதி துஷ்பிரயோகம் அம்பலம்!

ஊவா மாகாணசபையில் நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் லஞ்ச ஊழல் தொடர்பாக அமைக்கப்பட்ட ஆணைக்குழுவே, இந்தத் துஷ்பிரயோகத்தைக கண்டுபிடித்துள்ளது.

விதைகள், கிழங்கு, விவசாயப் பொருட்கள் கொள்வனவு என - மகாணசபையில் இருந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் - இவை பயன்படுத்தப்பட்டமை, அதில் ஏற்பட்ட வருமானங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை.

இதன் காரணமாக, மாகாணசபையில் 2 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## புதையல் தேட முயன்றோர் பொலிஸாரால் கைது

இரண்டு பொலிஸார் உட்பட 4 பேர் கொட்டகதெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் எடுக்க எனக் கூறி, இரண்டு சாமியார்கள் பொலிஸாரின் உதவியுடன் கொட்டகதெனியப் பிரதேசத்திற்கு சென்றுள்ளனர்.

இவர்களைப் பின்தொடர்ந்த பொலிஸார் - அவர்களைக் கைது செய்து, கொட்டகதெனிய நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

## தனிநாயகம் அடிகளின் நினைவுதின நிகழ்வு!

தனிநாயகம் அடிகளாரின் 90 ஆவது பிறந்த நாள் நிகழ்வும், 23 ஆவது மறைந்த ஆண்டு நினைவு தின நிகழ்வும் - எதிர்வரும் திங்கட்கிழமை இரு இடங்களில் நடைபெறவுள்ளது.

முதலாவது நிகழ்வு - புனித பத்திரிசியார் கல்லூரி முதல்வர் வணக்கத்திற்குரிய அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் - காலை 8.30 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வில், தமிழீழ விடுதலை அணியின் பொதுச்செயலாளர் மா.க.ஈழவேந்தன்- 'தமிழ் இலக்கிய உலகில் தனிநாயகம் அடிகளார் ஏற்படுத்திய தாக்கம்' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

அன்றையதினம் - பி.ப 1.30 மணிக்கு - புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில், அதிபர் பி.எவ்.சின்னத்துரை தலைமையில் நினைவு தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் மா.க.ஈழவேந்தன் 'தமிழால் உலகாண்ட தனிநாயகம் அடிகளார்' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

# அடுத்த மூன்று வருடங்களுக்குள் 15 லட்சம் கண்ணிகள் அகற்றப்படும்!

## பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

இரண்டு தசாப்தகாலமாக இடம்பெற்ற யுத்தத்தின்போது, வடக்கு-கிழக்கில் புதைக்கப்பட்ட சுமார் 15 இலட்சம் கண்ணிவெடிகளை, அடுத்த மூன்று ஆண்டு காலத்துக்குள் முற்றாக அகற்றிவிடுவதற்கு இலங்கை இலக்கை நிர்ணயித்துள்ளது.

2006 ஆம் ஆண்டுக்குள் அந்த இலக்கை அடைவது, அரசாங்கத்தின் நோக்கமாகும் எனப் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், கடந்த ஒரு வருடத்தில் 10 வீதமான நிலக்கண்ணிகள் அகற்றப்பட்டிருப்பதாகத் அவர் தெரிவித்தார்.

கண்ணிவெடி அகற்றுவதற்குத் தேவையான 32 கோடி ரூபா நிதி தொடர்பாக - ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டப்பிரிவோடு உடன்படிக்கை கைச்சாத்திடும் வைபவத்திலே பிரட்மன் வீரக்கோன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## இரத்மலானை பகுதியில் பட்டம் பறக்கவிடத் தடை!

இரத்மலானை விமானநிலையத்தை அண்டிய பகுதிகளில், பட்டங்கள் பறக்கவிடுவதைத் தவிர்க்குமாறு, விமானப்படையினர் - பொதுமக்களிடம் கேட்டுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பலாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த விமானத்தில், பட்டத்தின் நூல் சிக்கியதால் எழுந்த பிரச்சினையையடுத்தே, விமானப்படையினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

விமானத்தில் நூல் சிக்குவதால், விமானம் தீப்பற்றக்கூடிய வாய்ப்பு உள்ளதென்றும், மேலும் பல விளைவுகள் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

லயன் எயர், விமானப்படை அன்ரனோவ்விமானம் விமானங்களிலேயே, பட்டங்களின் நூல் சிக்கியுள்ளது என்று விமானப்படையினர் தெரிவித்துள்ளனர்.

# வாழ்வோதய நிறுவன ஏற்பாட்டில் மன்னாரில் கலந்துரையாடல்!

'சமாதான முன்னெடுப்பும், பேச்சுவார்த்தையின் எதிர்கால நிலையும்' எனும் தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று மன்னார் வாழ்வோதய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

சமாதானத்திற்கும், அபிவிருத்திக்குமான மக்கள் ஒன்றிய அமைப்பினால் - வாழ்வோதய நிறுவன ஏறபாட்டில் இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் - தாழ்வுபாடு வீதியிலுள்ள அமலமரி கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு வாழ்வோதய இயக்குநர் எஸ்.யேசுராசா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மங்கள விளக்கினை இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்தலைவர்கள் ஏற்றினர்.

இந்நிகழ்வில், மன்னார் மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு யோசப், சமாதானத்திற்கும், அபிவிருத்திக்குமான மக்கள் ஒன்றியத் தலைவர் ஒஸ்வாட், மனோகர சர்மா, மௌலவி ஆசிம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை உரையாற்றுகையில் - இந்தச் சமாதானம் தற்காலிகமானது. இது நிரந்தரமானதாக மலரவேண்டும். சமாதானம் எனும் மரத்தை நாட்டி, உயிரோட்டமுள்ள நீரை ஊற்றி, செழிப்படையச் செய்ய வேண்டுமெனத் தெரிவித்தார்.

ஒஸ்வாட் உரையாற்றுகையில்- மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இருபது வருடமாக மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். எனவே, சமாதானத்தை மலரச் செய்ய நாம் அனைவரும் பாடுபட வேண்டும். அத்துடன், இனப்பிரச்சினையைத் தீர்க்க, ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு இரண்டு நாட்கள் இடம்பெற்றது. (201)

## விமான நிலையக் கட்டணம் அடுத்த மாதம் முதல் அதிகரிப்பு

கட்டுநாயக்க விமானநிலையத்தின் ஊடாக, வெளிநாடுகளுக்குச் செல்லும் அனைத்துப் பயணிகளிடமும் அறவிடப்படும் விமானநிலையக் கட்டணம் - எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 500 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று, நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, விமானநிலையக் கட்டணமாக 1500 ரூபா அறவிடப்படும் என்று - நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், இடைத்தங்கல் பயணிகளுக்கும் இந்தக் கட்டணம் ஏற்புடையதல்ல என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேடப்பட்ட பாதாளக் குழு உறுப்பினர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

நாலந்த எல்லாவெல கொலை வழக்கில், தேடப்பட்டு வந்த பாதாள உலகைச் சேர்ந்த அம்பிகா சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் தெமட்டகொட என்ற இடத்தில் வைத்து - மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை, அண்மையில் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படும் கைதிகள் - பாதாள உலகக் கும்பல்களினால் சுட்டுக்கொல்லப்படுவது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொய்ச் சாட்சியமளித்தவர்களுக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

பண்டாரவளை - பிந்துனுவெவ கொலைச் சம்பவம் தொடர்பாக, பொய்ச்சாட்ச்சி சொன்ன நான்கு பேருக்கும் - இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சாட்சிகளின் கூற்றுக்களால் நீதி வழங்கப்படுகின்றது. ஆனால், இந்த நான்கு சாட்சிக்காரர்களும் பொய்ச் சாட்சி கூறியதாக நீதிமன்றம் கருதுகிறது என்று தலைமை நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

பீ.எம்.காமினி விஜேசூரிய, ஆர்.எம்.நந்தசிறி ராஜபக்ஷ, பி.எம்.பிரியந்தலால், சுசந்த ரவீந்திரலால் ஆகிய இந்த நான்கு பேருமே சிறைத்தண்டனை பெற்றவர்களாவர்.

# வட-கிழக்கு பௌத்த சின்னங்களை பாதுகாக்குமாறு ஜனாதிபதி உத்தரவு!

வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள பௌத்த சின்னங்கள், பௌத்த இதிகாசங்கள் முதலியவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

லங்கா பட்டுனு என்ற இடத்தில் புலிகளால் - விகாரை ஒன்று அழிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள், பௌத்த சின்னங்களை அழிக்கும் நடவடிக்கையாகும். இதனைத் தடுக்கவேண்டியது அவசியமானது என்று கூறியே, ஜனாதிபதி இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

புராதன சின்னங்களை அழித்து நிர்மூலமாக்குவதன் மூலம் விடுதலைப் புலிகள் - பௌத்த சான்றுகளை அழிக்க முயலுகின்றார்கள் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## சொத்துக்கள் வெளிப்படுத்தும் காலக்கெடு மேலும் நீடிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களை வெளிப்படுத்துவது தொடர்பான காலக்கெடு மேலும் நீடிக்கப்படவுள்ளது. இவ்வாறு கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சொத்துக்கள் வெளிப்படுத்துவது தொடர்பாக 31 ஆம் திகதி வரை காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலக்கெடு மேலும் நீடிக்கப்படமாட்டாது என்றும், இக் காலப்பகுதியில் சொத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

### மன்னார் மாவட்டத்தில்

## இரண்டு கிராமங்களுக்கு நிகொட் நிறுவனம் உதவி!

(மன்னார்)

மன்னாரிலுள்ள இரண்டு கிராமங்கள் - நிகொட் நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

தமிழ்க் கிராமமான பாப்பாமோட்டையும், முஸ்லிம் கிராமமான பெரியகரிசலுமே அபிவிருத்தி செய்யப்படவுள்ள கிராமங்களாகும்.

முதல்கட்டமாக - பாப்பா மோட்டையின் குளக்கட்டு வீதி அமைக்கப்படவுள்ளது. அடுத்து, பெரியகரிசலில் உள்ளூர் வீதி அமைக்கப்படவுள்ளது.

கிராம அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து, இந்த அபிவிருத்தி பணிகளை நிகொட் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

(201)

## உயர் பாதுகாப்பு வலயங்களை

# தற்காலிகமாகவேனும் பின் நகர்த்த

# நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலய முன்னரங்க எல்லைகளை, தற்காலிகமாகவேனும் பின் நகர்த்துவதற்கு ஆவன செய்யுமாறு, வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் க.குணராசா - கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியிடம் வேண்டுகோள்விடுத்தார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, மாவட்ட வைத்தியசாலை, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு, சுமுகமாகச் சென்றுவரக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்காகத் தற்காலிகமாகவேனும், பாதுகாப்பு முன்னரங்கைப் பின்னகர்த்த ஆவனசெய்யவேண்டும் என்று கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வலிகாமம் வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது, அங்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தியிடமே இந்தக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (68)



கடந்த சனிக்கிழமையன்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற டொனால்ட் கனேஷ்குமார் ஞாபகார்த்த, கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் - சென்ற லைற்ஸ் அணியை எதிர்த்து ஆடிய பல்கலைக்கழக அணி வீரர்கள், யாழ். மத்திய கல்லூரி உப அதிபர் பத்மநாதனுக்கு - போட்டிக் குழுத்தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரால் அறிமுகம் செய்து வைக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

### ஆரோக்கிய அன்னையின் திருநாள்

யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள - புனித வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் திருநாள், எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகி, தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளது. யாழ். ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில், திருநாள் கூட்டுத்திருப்பலி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முன்பள்ளிகளுக்கு கியூடெக் உதவி

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, 6 முன்பள்ளிச் சிறார்களுக்கு - கியூடெக் நிறுவனத்தினர் பால்மா வழங்கிவருகின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள மாமுனை, தாளையடி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு ஆகிய கிராமங்களிலுள்ள முன்பள்ளிச் சிறார்களுக்கே மேற்படி பால்மா வழங்கப்பட்டு வருகிறது.

இப்பிரதேசத்திலுள்ள ஏனைய முன்பள்ளிகளுக்கும், பால்மா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

### கண் பரிசோதனை முகாம்

நல்லூர் றோட்டறிக் கழகமும், யாழ். நகர்மைய றோட்டறிக் கழகமும் இணைந்து - இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்றினை, இன்று கொக்குவில் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடத்துகின்றன.

இந்த முகாமில் இலவசக் கண் பரிசோதனை செய்யப்படுவதுடன், குறைந்த விலையில் மூக்குக்கண்ணாடிகளும் மக்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் ஆழியவளை தபாலகம் சொந்த இடத்தில் இயங்குகிறது

(ஆழியவளை)

ஆழியவளை உபதபாலகம் 12 வருடங்களின் பின்பு, கடந்த புதன்கிழமை முதல் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கிவருகிறது.

இந்த தபாலகத்தின் திறப்புவிழா நிகழ்வு - வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுத் தலைவர் சி.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கினை பளை உதவி அரசாங்க அதிபர் அ.புத்திரசிகாமணி, வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன், ஆழியவளை திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் ஈழவாணி ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக்கொடியினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் மக்கள் தொடர்பாளர் மன்னன் ஏற்றிவைத்தார். உபதபாலகத்தின் பெயர்ப்பலகையினை மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை திரைநீக்கம் செய்து வைத்தார். உபதபாலகத்தினைக் கிளிநொச்சி, வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் வீ.குமரகுரு நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்தத் தபாலகம் மீளத் திறக்கப்பட்டதனால் இந்தப் பிரதேசத்திலுள்ள மாதாந்த உதவிப்பணம் பெறும் மக்கள் நன்மை அடைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (122)

## யாழ். குடாநாட்டிற்கு

# தூய குடிநீர் வழங்க உலக வங்கி நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு, உலக வங்கியின் நிதி உதவியுடன் விசேட செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக, யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விசேட செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, உலக வங்கி 40 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

அளவுக்கு அதிகமான இரசாயன உரப்பாவனை, மலசலக்குழிகளிலிருந்து வரும் கழிவு என்பவற்றால், நிலத்தடி நீர் மாசடைந்துள்ளதாக- சமீபத்திய ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. இதனால், சுத்தமான நீரைக் கிணறுகளிலிருந்து பெறமுடியாதுள்ளதாகவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு, சுத்தமான நீரைப் பெறும் பொருட்டு- துரிதமாக இந்தத் திட்டத்தை அமுல் செய்வது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (122)

# பிரதம நீதியரசருக்கு எதிராக முன்னாள் நீதிவான் வழக்கு!

நீர்கொழும்பு மாவட்ட முன்னாள் நீதிவான் எஸ்.பி.பண்டாரநாயக்க - பிரதம நீதியரசர் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல்செய்துள்ளார்.

நீதிமன்றத்தில் காணப்பட்ட எழுது கருவிகள் தொடர்பான குற்றச்சாட்டின பேரில், நீர்கொழும்பு மாவட்ட நீதிவான் பதவி விலக்கப்பட்டிருந்தார்.

தன்னைப் பதவியிலிருந்து நீக்கியது நியாயமற்றது என்ற குற்றச்சாட்டின்பேரில் - மேன்முறையீடு ஒன்றினை நீதிவான் எஸ்.பி.பண்டாரநாயக்க செய்திருந்தார்.

அவருடைய மேன்முறையீட்டு மனுவும் நிராகரிக்கப்பட்ட காரணத்தால், தற்போது உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

மீண்டும் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யவேண்டும் என்றும், தன்னிடமுள்ள குற்றமற்ற தன்மையை நிருபிக்கவேண்டியும், இம் மனுவினை நீதிவான் தாக்கல் செய்துள்ளார்.

### நெடுந்தீவு வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கீடு

(நெடுந்தீவு)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் - 2003 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின்கீழ், நெடுந்தீவு வைத்தியசாலைக்குச் சூரியசக்திமூலம் இயங்கும் மருத்துவ உபகரணங்களின் கொள்வனவுக்கென, 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே 5 இலட்சம் ரூபா பெறுமதியான சூரிய மின்கலமும், அதன்மூலம் இயங்கும் குளிரூட்டியும்- அரசசார்பற்ற நிறுவனமொன்றால் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)


வாழ்க வளமுடன்




இரண்டாவது அகவையில்



பெயர் : சிவாஷிகன்
முகவரி : 207,சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாவது அகவையில்

பெயர் : சு.பௌஷிகா
முகவரி : அச்செழு. (ஜேர்மனி)



மூன்றாவது அகவையில்



பெயர் : த.அபிஷன்
முகவரி : 3ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

நான்காவது அகவையில்

பெயர் : எஸ்.யே.சுபீட்சன்
முகவரி : ஏ.வீ. றோட், கொழும்புத்துறை.



ஏழாவது அகவையில்



பெயர் : சு.சிவோதயன்
முகவரி : மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்




சிறாரின் பெயர்:--------------------------------
முகவரி :--------------------------------
பிறந்த ஆண்டு:--------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
--------------------
பெற்றார் ஒப்பம்

# 9Th IAAF FRANCE

# பாரிஸ் - பிரான்ஸ்

## 9 ஆவது உலக தடகள சாம்பியன் ஷிப் போட்டிகளிலிருந்து



கிம் கொலின்ஸ்

அவர் மற்றோரைப் பின்தள்ளி, அம்பு பாய்ந்ததுபோல இலக்கு நோக்கிப் பாய்ந்தது ஐம்பதாவது மீற்றரில். அதன் பின், அவரை முந்த யாராலும் முடியவில்லை. ஆகவே, இந்த நிமிடத்தின் உலகின் வேகமான பெண்மணி கெலி வைற் தான். பாரிஸ் சாம்பியன். ஷிப் போட்டிகளுக்கு முன்னமே இவர் பேசப்பட்டவர். மரியன் ஜோன்ஸ் இல்லாத இடத்தில் 100 மீற்றர் தங்கத்தை அமெரிக்கா இழந்து விடுவதைத் தடுப்பவர் - இவராக இருக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்தவர். அதனை நிறைவேற்றியும் விட்டார். 26 வயது நிரம்பிய இவர், இரண்டு வருடங்களுக்கு முன் வெள்ளிப் பதக்கம் வென்றவர். இம்முறை, இவ்வருடத்தின் அதிகுறைந்த நேரமான - 10.89 செக்கனில் - 100 மீற்றரைக் கடந்து தங்கம் வென்றார். இதேவேளை, அமெரிக்க ரோரி எட்வட்ஸ்- 10.93 செக்கனில் ஓடி, வெள்ளிப் பதக்கம் வென்றார். ஆனால், எதிர்பார்க்கப்பட்ட சண்ணா புளொக் - 10.99 செக்கனில் ஓடி, வெண்கலப் பதக்கத்தையே பெறமுடிந்தது. கெலி வைற் - இதற்கிடையில் தனது அடுத்த இலக்கு 200 மீற்றர் என்கிறார். 100 மீற்றர் பெண்கள் நிகழ்வில் ஏமாற்றமடைந்த இன்னொருவர் - பஹாமாவைச் சேர்ந்த சன்ரா ஸரப். உண்மையில் மரியன் ஜோண்ஸுக்கு அடுத்ததாக இவரே - 100 மீற்றர் முதற்தர வீராங்கனையாகக் கருதப்பட்டவர். ஆனால், நடந்ததெல்லாம் வேறுவிதமாக அமைந்துவிட்டது.

வேறுவிதமாக அமைந்தது - 100 மீற்றர் பெண்கள் நிகழ்வு மட்டுமல்ல, மிகப்பரபரப்பாகப் பேசப்பட்ட 100 மீற்றர் ஆண்கள் நிகழ்வும்தான். ஏனெனில், 1983 இல் உலக சாம்பியன் ஷிப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்; வேகங்குறைந்த 100 மீற்றர் வெற்றிநேர ஓட்டம் இதுதான் என்கிறார்கள். இருந்தும், இந்தப் போட்டியில் ரிம் மொண்ட்கொமரி - 5 ஆவது இடத்தையே பெறமுடிந்தமை பெரும் துரதிஷ்டம். முன்னதாகவே அரை இறுதிப் போட்டியில் - மொரிஸ் கிறீன் தோல்வி. கரிபியன் தீவுகளில் ஒன்றான சென்.கிட்ஸ் என்னும் தீவைச் சேர்ந்த- கிம் கொலின்ஸ் 10.07 செக்கனில் ஓடி முதலிடம் பெற்றமை ஒரு ஆச்சரியம். அதேவேளை, ரினிடாட் நாட்டின் 18 வயதே நிறைந்த டரல் பிறவுண் - வெள்ளிப் பதக்கம் பெற, இங்கிலாந்தின் டரன் கம்பெல் வெண்கலத்தை வென்றார்.

எது எவ்வாறயினும் - இரண்டாம், மூன்றாம் இடம் பெற்றவர்கள் 10.8 செக்கனில் ஓடிமுடிக்க, முதல் 6 தடகள வீர்களும் 600 இல் ஒரு செக்கன் வித்தியாசத்திலேயே தரம் பிரிக்கப்பட்டார்கள். கொலின்ஸ் கூட, பிறவுண்தான் முதலிடம் என்று கடைக்கண்ணால் பார்த்துத் தீர்மானித்தாராம். (வாழ்க உயர் தொழில்நுட்பம்) ஆனால், அதிகம் எதிர்பார்த்த சேம்பர்ஸ் பேர்ணாட் வில்லியம்ஸ், மொன்ட்கொமரி ஆகியோர் கண்ணிமைக்கும் நேரத்தில் முதலாமிடத்தை நழுவவிட்டது அதிர்ச்சியா கத்தான் இருந்திருக்கும். ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம் என்பது - ஏதன்ஸ் ஒலிம்பிக்கைப் பொறுத்தவரை, மிகப் பெரும் அதிர்ச்சிக்குரியதான ஒன்றாக இருக்கப்போகிறது என்பது நிச்சயம்.

கெலி வைற் பற்றிய இன்னொரு சிறு குறிப்பு - அது


கெலி வைற்


மகத்தான வெற்றிபற்றியது. பெண்களுக்கான 200 மீற்றரிலும், அம்மணி அதிசயமாகத் தங்கம் வென்றார். எடுத்துக் கொண்ட நேரம் 22.05 செக்கன். 1991 இல் ஜேர்மனியின் கத்தரின் கிராப் 100 மீற்றர், 200 மீற்றர் இரண்டிலும், தங்கம் வென்றபின், தற்போது கெலி வைற் மீண்டும் அந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறார். இதில் ஒரு ஏமாற்றம் என்னவென்றால், அதிதிறமைவாய்ந்த சண்ணா புளொக் 5 ஆவது இடம்பெற்றதுதான்.

மொறிஸ் கிறீன் 100 மீற்றர் அரை இறுதிப் போட்டியின் தொடக்கத்தில் - முதலாவதாகச் சீறிப்பாய்ந்தவர் - இறுதியில் தோல்விகண்டு, நொண்டிக்கொண்டே (எட்டாவது இடம்) வெளியேறியது துயரமானதொரு காட்சி. ஆனால், கிறீன் விட்டுக்கொடுப்பவரல்ல. அவர் தன்னம்பிக்கையுடன் கூறுகின்றார் - "சில சந்தர்ப்பங்கள் வாய்ப்பாக அமைவதில்லை என்பது உண்மைதான். ஆனால், அடுத்த வருடம் மீண்டும் வருவேன். இந்தத் தோல்வி எனது ஆதிக்கம் முடிந்தது என்பதைக் குறிக்காது. நான் மீண்டும் வெல்வேன்." மொறிஸ் கிறன் - "KANSAS COMET" என்று அழைக்கப்படுபவர். 100 மீற்றரில் உலகின் மூன்று பட்டங்கள் மற்றும் ஒலிம்பிக் பட்டம் போன்றவற்றைத் தன்னகத்தே வைத்திருந்த இவர், தற்போது ஒலிம்பிக் பட்டம் ஒன்றை மட்டுமே தக்கவைத்துக்கொண்டவராக இருக்கிறார்.

1500 மீற்றர் ஓட்டத்தின்போது, தமக்கு விருப்பமான மெஹடி பாலா வெல்ல வேண்டும் என்ற விருப்பில் - அறுபதினாயிரம் ரசிகர்கள் மெஹடி, மெஹடி என்று ஆரவாரித்து, ஆதரவைத் தெரிவித்துக்கொண்டிருக்க, மொரோக்கோவின் ஹிக்கம் எல் கியுறோஜ் தனக்குத் தானே 'நீ உலகின் சிறந்த வீரர்கள் பங்குபற்றும் 1500 மீற்றர் பந்தயத்தில் ஓடிக் கொண்டிருக்கிறாய். அதுவும், உலகத் தடகளச் சாம்பியன் ஷிப் போட்டி என்பது விளையாட்டல்ல. நிதானித்துக்கொள்' என்று கூறிக்கொண்டே ஓடினார். 1500 மீற்றர் முடிவில் - அறுபதினாயிரம் பேரின் ஆரவாரம் அடங்கிப்போயிற்று. தங்கமகனாகி நின்றார் ஹிக்கம். இனி அடுத்து 5000 மீற்றர் தனது இலக்கு என்கிறார். 28 வயதான ஹிக்கம், 5000 மீற்றர் தங்கத்தையும் வென்றே தீருவார்போலத் தெரிகின்றது.


ஹிக்கம் - "இந்த இரண்டுபேர் மட்டும் போதும்"

4x100 மீற்றர் அஞ்சலோட்டம் - தங்கப் பதக்கம் அமெரிக்காவிற்கு என்பதில் எதுவித சந்தேகமும் இருக்கவில்லை. தற்போது அது கனவாகிப் போகும்நிலை உருவாகியுள்ளது. 100 மீற்றரில் ஐந்தாம் இடம்பெற்ற ரிம் மொண்ட்கொமரி தோல்வீயின் பின், மனம்தளர்ந்து அமெரிக்கா புறப்பட்டு விட்டார். இன்னொரு வீரர் ஜோண் டிரமண்ட்- 100 மீற்றர் ஓட்டத்தில் ஆரம்பத்தவறு காரணமாக இடைநிறுத்தப்பட, அதனை எதிர்த்து மைதானத்தில் படுத்து, ஆர்ப்பாட்டம் செய்து, ஏனைய போட்டிகளில் பங்குகொள்ளமாட்டேன் என்று அறிவித்துள்ளார். முக்கியமாக மொறிஸ் கிறீன் அரை இறுதிப்போட்டியிலேயே தசைப்பிடிப்பால் நொண்டியபடி, களத்தில் இருந்து வெளியேறியவர். இவரும் அஞ்சலோட்டத்தில் பங்குகொள்வது முடியாதுபோல இருக்கிறது. மொத்தத்தில் அமெரிக்காவுக்குத் தங்கம் பறிபோவது நிச்சயமாயிற்று.



ஜோண் டிரமண்ட் பகிஷ்கரிக்கிறார்.

## விளையாட்டு அரங்கம்



முந்தமுடியாது முட்டோலாவை

உலகத் தடகளச் சாம்பியன் ஷிப் 800 மீற்றர் பெண்கள் போட்டியில் - மூன்றாவது தடவையாகத் தங்கம் வென்றவர் மொசாம்பிக் நாட்டின் முட்டோலா. இவர் ஒலிம்பிக் சாம்பியனும் கூட. இவர் 800 மீற்றர் கடக்க எடுத்துக் கொணட நேரம் - 1 நிமிடம் 59.59 செக்கன்கள்.

வெள்ளிப் பதக்கம் - இவருடனேயே கூடப் பயிற்சி பெறும் பிரித்தானியாவின் கெலி ஹோம்ஸுக்குக் கிடைத்தது. மூன்றாவது இடம்பெற்றவர் ரஷ்யாவைச் சேர்ந்த நட்டாலியா குருஷெல்ஷோவா. இறுதி 100 மீற்றரில் கெலி முட்டோலாவை முந்திய போதும், மீளப்பலம் பெற்று வேகமாக ஓடி முட்டோலா தங்கம் வென்றார். கெலி கருத்துக்கூறும்போது - 'நான் இறுதிக் கட்டத்தில் முன்னேறினாலும், முட்டோலா என்னை மேவுவார் என்று எனக்குத் தெரியும்' என்று கூறியிருக்கிறார். இருவரும் நல்ல தோழிகளாக இருப்பதால், முதல் இரண்டு இடமும் தமக்குள் வந்ததில் இருவருக்கும் பெரும் மகிழ்ச்சி.

தடகளப் போட்டிகளில் 400 மீற்றர் ஓட்டம் என்றால் - அந்தக் கம்பீரமான மனிதர் மைக்கல் ஜோண்சன்தான் நினைவுக்கு வருவார். தற்போது, அவர் ஓய்வுபெற்றுவிட்டாலும், பாரிஸிலிருந்து 400 மீற்றர் தங்கத்தை - அமெரிக்கா கொண்டுசெல்பவர் ஜெரோம் யங். ஜமெய்ககாவில் பிறந்து, அமெரிக்கப் பிரஜையான 27 வயதான யங் - 400 மீற்றரைக் கடக்க எடுத்துக்கொண்ட நேரம் 44.50 செக்கன்கள். இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர் - பெயர் டைரி வோஷிங்ரன். வெண்கலம் வென்றவர். பிரான்ஸைச் சேர்ந்த மார்க் ரக்குல். வெள்ளிப்பதக்கம் வென்ற வோஷிங்டன், 1997 இல் மைக்கல் ஜோன்சனுக்குப் பின்னாக, இரண்டாவதாக வந்தவர். தற்போதும், அதனை நினைவுகூர்ந்து மைக்கல் ஜோன்சனின் இடத்தைப் பிடிக்கமுடியவில்லையே என்று கவலைப்படுகின்றார்.



ஜெரோம் யங்



டொமினிக்கன் குடியரசு நாட்டைச் சேர்ந்த பீலிக்ஸ் சான்சஸ் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். அமெரிக்கா வெள்ளியையும், கிறீஸ் வெண்கலத்தையும் வென்றது.

பொதுவாகப் பாரிய தடகளப் போட்டிகளின்போது, அது சார்ந்தோர் தங்கிக்கொள்வதற்காக ஒரு தனியிடமே ஒதுக்கப்படும். அது "தடகள வீரர்கள் கிராமம்" என்று அழைக்கப்படும். தற்போதைய செய்தி - பாரிஸ் சாம்பியன் ஷிப் போட்டிகளுக்காக வந்திருக்கும் பிரித்தானிய 100 மீற்றர் ஓட்ட வீரர் டுவெயன சேம்பர்ஸ்- ஒதுக்கப்பட்ட கிராமத்தில் தங்குவதற்கு மறுத்துள்ளார் என்பதாகும். அவர் தனக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இருப்பிடத்தைவிட்டு வெளியேறி, நகர மையத்தில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலில் தங்கியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்கக் குழுவைச் சேர்ந்த ஒரு சிலரும் - வசதிகள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளநிலையில், பாரிஸ் உலக சாம்பியன் ஷிப் ஏற்பாட்டாளர்கள் சில சங்கடங்களை எதிர்நோக்குகின்றார்கள். சேம்பர்ஸ் கருத்துக்கூறும்போது - தான் வசதிக் குறைவைக் காரணம்காட்டி, இடத்தைவிட்டு நீங்கவில்லையென்றும், இப்படியானதொரு முக்கிய நிகழ்வின்போது, தனக்குத் தனிமை தேவைப்படுவதாகவும், அதுவே தன்னை ஒருநிலைப்படுத்திக்கொள்ள உதவுமென்று தான் நம்புவதாகவும் கூறியுள்ளார். மேலும் 100 மீற்றர் ஓட்டம் முடிவடைந்ததும், நான் மீண்டும் கிராமத்துக்குத் திரும்பிவிடுவேன் என்றும் கூறியுள்ளார்.

பொதுவாக உயர்திறமையுள்ள தடகள வீரர்கள் இப்படியாகத் தனிமை நாடிச்செல்வதொன்றும் புதுமையல்ல என்கிறார்கள் விமர்சகர்கள். இதேவேளை, தடகள வீரர்கள் தங்கியுள்ள பல்கலைக்கழக தங்குமிட வசதிகள் எல்லாம், திருப்தியானவை என்று கூறியிருக்கிறார் பிரித்தானியக் குழுவின் அங்கத்தவர் ஒருவர். ஆனாலும், இவர்கள் தங்கியுள்ள அறைகள் குளிரூட்டப்பட்டவையல்ல. அண்மையில் பிரான்சில் நிலவிய அதியுயர் வெப்பநிலை காரணமாக - ஆயிரக்கணக்கானோர் இறந்துவிட்டனர் என்பதுடன் இணைத்து நோக்கும்போது, தடகள வீரர்கள் தம் பாதுகாப்புக் குறித்து அச்சமுறுவதைக் குறைகூறவும் முடியாதல்லவா.


# போடு பந்து போடு







சர்வதேச கிரிக்கெட் உலகில் பாவிக்கப்படுகின்ற கிரிக்கெட் உபகரணங்களில் மிகவும் முக்கியமானதும், பலசந்தர்ப்பங்களில் ஆட்டத்தின் போக்கையே மாற்றிவிடக்கூடியதுமான உபகரணமாக "பந்து" விளங்குகின்றது. உண்மையில் சர்வதேச ஆட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற கடினப் பந்துகள் பலவாறு வகைப்படுத்தப்படுகின்றன. அதிலும் பல முன்னணி நிறுவனங்கள் இந்தப் பந்து தயாரிப்பில் போட்டா போட்டியாக களமிறங்கியிருந்தாலும், சர்வதேச அளவில் பலம் பெற்று விளங்குகின்ற சில நிறுவனங்கள் பந்துகளை வருடாவருடம் அள்ளி வீசிக்கொண்டு வருகின்றன. உண்மையில் பகல் ஆட்டங்களுக்கு செந்நிறப் பந்தும், இரவு ஆட்டங்களுக்கு வெண்ணிறப் பந்தும் - ஆரம்ப காலத்தில் பாவிக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது வெண்ணிற உடுப்புகள் கொண்டு களமிறங்கும் ஆட்டங்களுக்கு செந்நிறப்பந்தும், அதேபோல வர்ணச் சீருடைகளுடன் களமிறங்கும் நிலையான ஆட்டங்களுக்கு வெண்ணிறப் பந்தும், ICC ஆல் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கின்றது. பந்துகள் தாங்கள் தயாரிக்கப்படும் நிறுவனத்தால் மட்டும் வேறுபடவில்லை. அவை ஒருநாள் ஆட்டங்களுக்குரியவை, டெஸ்ட் ஆட்டங்களுக்குரியவை, முதல்தர ஆட்டங்களுக்குரியவை என்றெல்லாம் வேறுபட்டுக் காணப்படுகின்றன.





CA கிரிக்கெட் பந்துகள் பாகிஸ்தான் தயாரிப்புக்குரியவை. இவை தற்போது கிரிக்கெட் சந்தையில் அதிகமாக பிரபல்யம் பெற்று இருக்கின்றன. இதிலே இரண்டு வகை காணப்படுகின்றது. ஆறு சுப்பர் கவுன்ட் பந்துகள், 60 US$ ஆகவும், ஆறு சுப்பர் ஸ்டார் பந்துகள் 80 US$ ஆகவும் - சந்தையில் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

அடுத்ததாக - சலஸன்ஜர் பந்துகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன. அவை அல்டிமேட், டெஸ்ட், கவுன்டி, கிறவுன்மாட்ச் மற்றும் பயிற்சியில் பாவிக்கப்படுபவை. இவ்வகையான பந்துகளின் உள்ளே காணப்படுகின்ற பந்தின் உள்ளீட்டினைச் சுற்றிக் காணப்படுகின்ற வெளித் தோல்களின் தடிப்பு மற்றும் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவை பொதுவாக 51/2, 4 3/4 அவுன்ஸ் அளவில் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் இதனைச் சுற்றிக் கட்டப்படும் நூல்களின் தரத்தினைப் பொறுத்து - **A, B** ஆகிய தரங்களில் கிடைக்கின்றன.




இவற்றில் கிறவுன் 4.99 ஸ்ரேலிங்பவுன்ஸ் இற்கும் கவுன்டி 9.6 ஸ்ரேலிங் பவுனிற்கும் விற்பனையாகின்றது. சிஸ்போர்ட் கோல்ட் கிரிக்கெட் பந்துகள் - 7.09 ஸ்ரேலிங் பவுன்ஸ் இற்கும், சிஸ்மல்டிடேவ் கிரிக்கெட் பந்துகள் 4.42 ஸ்ரேலிங் பவுன்ஸ் இற்கும் விற்பனையாகின்றன. இவை அவ்வளவாகப் பரிச்சயமில்லாத பந்து வகைகள். அமெரிக்கத் தயாரிப்பான சிறேய்ஸ் காவாலியர் 80 என்ற பந்து 15 US$ இலிருந்து 180 US$ வரை விலைபோகின்றது. இந்தப் பந்து 5 லெதர்களைக் கொண்டது. கிரிக்கெட் உலகிலே தனக்கென ஒரு இடத்தினைப் பிடித்து வைத்திருக்கின்ற குக்காபுரா நிறுவனத்தின் பந்துகளில் - ஒன்றுடேவ் **CB** 101. இது சர்வதேச டெஸ்ட் போட்டிகளுக்கேற்றது. சுப்பர் மாட்ச் **CB** 115 என்றவகை - 5 லெதர்களினைக் கொண்டது. டேப்வெற்றை **CB** 101 **N** என்றவகை பொதுவாக முதல்தரப் போட்டிகளுக்கு உகந்தது. கவுன்டி டேவ் **CB** 1102 என்றவாறு இங்கிலாந்து மைதானங்களுக்கு ஏற்றவாறு ஆக்கப்பட்டிருக்கின்றது. கவுன்டிகிறவுன் **CB** 1105 உம் இதேபோல்தான். அடுத்ததாக கோல்ட் கிறவுன் **CB** 1125 ரட் டிராகன் **CB** 1158 போன்ற பந்தின் வகைகளும் சிறப்பான குக்காபுரா நிறுவனத்தின் பந்து வகைகள்தான்.

சான்ஸ் பாரிலிஸ் கிறின்லன்ட்ஸ் **(SG)** என்ற நிறுவனம் ஒரு இந்திய நிறுவனமாகும். ஆசிய நாட்டுக் கிரிக்கெட் மைதானங்களுக்கு ஏற்றவாறு பந்துகளைத் தயார் செய்வதில் பெயர்பெற்ற நிறுவனமாக, இது விளங்குகின்றது. இந்த நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பந்துகளின் வகைகளில் ஒன்று கிளப். இது கழக ஆட்டங்களுக்கும் பாடசாலை மட்டப்போட்டிகளுக்கும் உகந்தது. விலை இந்திய மதிப்பின் விலை ரூபா 225. ரூனமன்ட், இது சுற்றுப்போட்டிகளுக்குகந்தது. ரஞ்சி கிண்ணப்போட்டிகளில் பெரும்பாலும் பாவிக்கப்படுவது இதுவாகும். இந்திய விலை ரூபா 435 இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பந்துவகை, **'SG** டெஸ்ட்' ஆகும். இதனுடைய இந்தியப் பெறுமதி ரூபா 615. **SG** சீமர் என்ற பந்து இந்திய ரூபா 170 இறகு மிகவும் மலிவாகக் கிடைக்கின்றது. அதேபோல் **SG** லீக் என்ற பந்து இந்திய ரூபா 340 இற்குக் கிடைக்கின்றது.




ஒரு வகையில் நோக்குகையில் கிரிக்கெட் ஆடம்பரமான ஒரு விளையாட்டு என்று கூறப்படுவதற்கு ஆதாரம் சேர்க்கும் வகையிலேயே, பந்துகளின் விலைகளும் அமைந்து வருகின்றன. கிரிக்கெட் தொடர்பில் பந்து வீச்சுச் சர்ச்சைகள் அதிகரித்துச்செல்லும் காலம் இது. இந்த வகையில் கிரிக்கெட் பந்துகளைத் தயாரிப்பவர்கள் பந்துவீச்சாளர்களிடம் இருந்து தம் நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள இன்னும் இன்னும் தரங்கூடிய பந்துகளைத் தயாரிக்கவே முனைவர்.

எனவே ஆய்வுகள் அதிகரிக்க, மூலப்பொருட்களின் தரம் அதிகரிக்கப்பட்ட விலைகளும் வேகமாக அதிகரித்துச் செல்வததைத் தவிர்க்க முடியாது. மைதானத்தில் மத்தியஸ்தர்கள் பந்துகளைக் கையாளும்போது, எவ்வளவு பக்குவமாகக் கையாள்கின்றார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கும். சிறியதொரு பந்து முழு மைதானத்தின் செயற்பாட்டையுமே நிர்ணயிப்பது விந்தையல்லவா. இதனால்தான் மத்தியஸ்தர்கள் கண்ணுக்குள் எண்ணையை விட்டுக்கொண்டு கழுகுகள் போல பந்தை அவதானித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

பந்துகளை ஒருகாலத்தில் சேதப்படுத்தி, விக்கெட்டுக்களைப் பெற்றுக்கொண்ட பந்துவீச்சாளர்கள், தற்போதைய சிறப்பான பந்துகளை இவர்கள் எப்படிக் கையாள்வது என்று தினறும் அளவுக்கு, பந்துகள் தங்களுடைய தயாரிப்புத் திறமையை வெளிப்படுத்தியிருக்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

P. N.சுதர்சன்.

# மீண்டும் எழுவாய்




பாரீஸ் தடகளப் போட்டிக்ள் சுசந்திகாவிற்கு மட்டுமல்ல அவரது ரசிகர்களுக்கும் ஏமாற்றம்தான். சுசந்திகா 100 மீற்றர் 200 மீற்றர் இரண்டு நிகழ்விலும் பாரீஸ் தடகளப் போட்டிகளில் ஒரு பதிவை ஏற்படுத்துவார் என்பதில் சந்தேகம் இருக்கவில்லை. ஆனால், 100 மீற்றர் போட்டியில் எதிர்பார்த்த யாருமே தங்கம் வெல்லவில்லை. என்றாலும், தங்கம் வென்ற டேவிட் கெலியின் திறமையில் சந்தேகமும் இல்லை. இந்த நிலையில் துரதிஷ்டவசமாக சுசந்திகாவின் உபாதை அதிகரிக்கவே அந்த நம்பிக்கை போயிருந்தது. அதோடு தொடர்ந்து 200 மீற்றர் ஓட்டத்தில் பங்குகொள்ளும் உடற் தகுதியும் இல்லை என்பதை உணர்ந்த சுசந்திகா தானாகவே அந்த நிகழ்வில் இருந்து விலகிக் கொண்டார். ஆனால், அவரது விருப்புக்குரிய நிகழ்வு அதுதான். இந்த வகையில் வேதனைப்பட்ட சூழ்நிலையில் இன்னொரு செய்தி வருகிறது.


முன்னதாக வந்த செய்திகளின்படி, முதன் முதலாக சர்வதேச ரீதியில் அமைக்கப்படவுள்ள சர்வதேச தடகளக் கமிஷன் குழுவின் பதினெட்டுப் பேரில் ஒருவராக சுசந்திகா போட்டியிடுவதாக இருந்தது. இதில் வென்றால் அது பெரும் புகழுக்குரியதாக இருக்கும். அதற்கான முனைப்பான பிரசாரங்களும் நடைபெற்றன. ஆனால், தற்போது இந்தப் போட்டியில் அவர் வென்று விடாமல் இருக்க நமது தரப்பே கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. அதாவது பாரிஸில் தற்பொது நிலை கொண்டுள்ள இலங்கைக் குழுவினரே இந்த "நல்ல" முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. ஆகவே, மரத்தால் விழுந்தவளை மாடேறி மிதித்த கதையாக சுசந்திகாவின் நிலை இருக்கிறது. ஆனால், சுசந்திகா ஒன்றை மனதில் வைத்திருக்கவேண்டும். 'காய்க்கிற மரம் தான் கல்லெறிபடும்'. ஆனால், அதுவே நல்ல கனிகளைத் தரும். மீண்டும் மீண்டும் பருவத்திற்கேற்ப காய்த்துக்கொண்டே இருக்கும். இது நியதி. மாற்ற முடியாதது. இந்த வகையில் சுசந்திகாவின் எதிர்காலம் இன்னும் இன்னும் பிரகாசிக்கப்படப்போவதை யாருமே தடைசெய்ய முடியாது. சுசந்திகா தளர்ந்து போபவர் அல்ல.

# இரண்டாவது வீரர்

பாகிஸ்தானுடனான பங்களாதேஷ் விளையாடிய முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி கண்டது பழைய செய்தி. ஆனால், இந்த டெஸ்ட் போட்டியில் ஒரு சாதனை சமப்படுத்தப்பட்டது விஷேடமான செய்தி. பாகிஸ்தான் அணியின் புதுமுகம் மூன்றாம் இலக்கத் துடுப்பாட்ட வீரர் யசீர் ஹமீட் முதலாவது இனிங்ஸில் 170 ஓட்டங்கள் மற்றும் இரண்டாவது இனிங்ஸில் 105 ஓட்டங்கள் பெற்று இரண்டு இனிங்ஸிலும் சதம் பெற்றபோது பேசப்படுபவரானார். முன்னதாக முதல் டெஸ்ட் போட்டியிலேயே இரண்டு இனிங்ஸ்களிலும் சதம் போட்டவர்கள் என்றால் அது ஒரேயொருவர்தான். அதுவும், அது நடைபெற்றது தற்போது சாதனை புரிந்துள்ள யசீர் ஹமீட் பிறப்பதற்கு முன்னர் - அதாவது, 1971 - 72 இல் மேற்கு இந்திய அணியின் லோறன்ஸ் றோவ் ஜமெய்க்காவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் கன்னித்துடுப்பாட்ட வீரராக நியூசிலாந்துக்கு எதிராக, முதல் இனிங்ஸில் 214 மற்றும் இரண்டாவது இனிங்ஸில் 100 உம் பெற்றார். இன்று ஏறத்தாள முப்பத்தொரு வருடங்களின் பின் கராச்சி நேஷனல் ஸ்ரேடியத்தில் 25 வயதான யசீர் ஹமீட் இரண்டு சதங்களைத் தனது முதலாவது டெஸ்டில் பெற்றுள்ளார். இதற்கு முன்னதாக, சர்வதேசப் போட்டிகள் என்ற வகையில் ஐந்து ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் மட்டும் பங்குகொண்டவர். இரண்டு இனிங்ஸிலும் சதம் அடித்தவர்கள் என்றவகையில், பாகிஸ்தான் வீரர்கள் ஹனிவ் மொகமட், ஜாவிட் மியன்டாட், வஜதுல்லா வஸ்தி மூவருமே இந்தப் பெருமைக்கு உரியவர்கள். மொத்தமாக, சர்வதேச டெஸ்ட் வரலாற்றைப் பார்க்கும்போது, யசீர் ஹமீட் இரண்டு இனிஸ்களிலும் சதம் போட்ட ஐம்பத்து மூன்றாவது வீரராகிறார்.



பீலிக்ஸ் சான்சஸ் 400 மீற்றர் தடை தாண்டலின் போது....



மெக்சிக்கோவின் 400 m பெண்கள் சம்பியன் அனா குவேரா



100 மீற்றர் பெண்கள் தடைதாண்டல் தங்கம் வென்ற கனடாவின் பேர்டிப்பா பெலீசியா (வலது)




அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் கேப்பல் (மத்தியில்) ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக் கம் வென்றுள்ளார்.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோக்கிற் பவர்.

திருக்குறள்.

## நமது நோக்கு

### இப்படி ஒரு உதாரணமா ?

ஜே.வி.பியினர் நாடு முழுவதும் நடத்திவரும் ஆர்ப்பாட்டங்கள், அரச எதிர்ப்புக் கூட்டங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பூரணமான ஆதரவு இருப்பதாக புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

தமது கட்சியின் மூலம் செய்ய முடியாத சில காரியங்களை, ஜே.வி.வி மூலம் செய்துமுடிக்கலாம் என்பதாலேயே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு ஆதரவளித்துவருவதாகக் கூறப்படுகிறது.

பொ.ஐ.முன்னணிக்குள் நிறையவே கருத்து முரண்பாடுகளும், பிரச்சினைகளும் இருந்துவரும் நிலையில் - அரசாங்கத்துக்கு எதிரான ஒருங்கிணைந்த போராட்டங்களை நெறிப்படுத்துவதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நெருக்கடிகளைச் சந்தித்துவருகிறார்.

இந்த நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காகவே - ஜே.வி.பியினரின் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா ஆதரவு தெரிவித்து வருகிறார். இதைவிட, ஜே.வி.பியின் பேரணிகளுக்கு சந்திரிகா மறைமுக ஆதரவுகளைத் தெரிவித்துவருவதற்கு வேறொரு காரணமும் இருக்கிறது.

ஐ.தே.மு அரசாங்கம் தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து நிற்கிறது. ஆனால், இந்த அரசாங்கத்துக்கு இருக்கின்ற ஒரே வழி, புலிகளுடன் நடைமுறையிலிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையும், சமாதான முயற்சிகளுமேயாகும்.

தற்போதைய நிலையில் சமாதான முனைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுதான் அரசாங்கத்தின் பலமாக இருக்கிறது. இந்த பலத்துக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவும் இருந்துவருகிறது.

சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் தெரிவித்துவரும் ஆதரவுதான், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருக்கடியை ஏற்படுத்திவிருக்கிறது. ஜனாதிபதியோ அவரது கட்சியோ பெரியளவிலான எதிர்ப்புக்களை தெரியப்படுத்தினால், அது சர்வதேச சமூகத்தின் கொள்கையில் பலத்த பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும்.

இதனால்தான், ஜனாதிபதி சந்திரிகா, அரசாங்கத்துக்கு எதிரான பாரிய போராட்டங்களை நடத்துவதைத் தவிர்த்து வருகின்றார் எனவும் சொல்லப்படுகிறது.

அதேவேளை - ஜே.வி.பி நடத்திவரும் ஆர்ப்பாட்டங்களுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் போதிய ஆதரவு கிடைப்பதில்லை என்று, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியினர் நடத்திவரும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு, ஈ.பி.டி.பியினர் மற்றும் சிறிய கட்சிகளிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்கின்ற போதிலும், பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து ஆதரவு கிடைப்பதில்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

நிச்சயமாக பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் ஜே.வி.பியினரின் போராட்டத்துக்கோ அல்லது அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கோ முழுமையான அதரவு கிடைக்காது என்பது வெளிப்படை.

காரணம் என்னவென்றால், பொ.ஐ.முன்னணிக்குள் இப்போது பலத்த அதிகாரப் போட்டிகள் நடந்துகொண்டிருக்கின்றன. கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது சிக்கலுக்குட்பட்டிருக்கிறது.

இதைவிட, ஜே.வி.பியுடனான கூட்டணியை அமைப்பது குறித்து பொ.ஐ.முன்னணியின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சிக்குள்ளும், கூட்டணிக் கட்சிகளுள்ளும் பலத்த கருத்து முரண்பாடுகளும், பிரச்சினைகளும் இருந்து வருகின்றன.

இதனாலேயேதான் - ஜே.வி.பியினர் நடத்தும் போராட்டங்களுக்கு பொ.ஐ.முன்னணியிடமிருந்து ஆதரவு போதியளவு கிடைக்காதிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், பொ.ஐ.முன்னணியினர் ஆதரவு கொடுக்காதிருப்பது ஒரு புறமிருக்க,

மகிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பியினருக்கு ஆதரவு வழங்குவதாக குறிப்பிட்டு - உதாரணம் காட்டியுள்ளவர்கள் யார் என்று பார்த்தால், அங்கேயும் ஒரு தமிழ்க்கட்சியே நின்றுகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மக்களின் அரசியல் போராட்டத்தை எதிர்த்து- அவர்களின் உரிமைகளுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஜே.வி.பியினருக்கு ஆதரவு வழங்குவதாக மகிந்த ராஜபக்ஷ ஈ.பி.டி.பியை குறிப்பிட்டிருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

தமிழர் விரோதப் போக்குடைய சக்திகளுடன் கரம் கோர்ப்பதே, தமது தொழிலாக இத்தகைய கட்சிகள் நிலைப்பாட்டை எடுத்திருப்பது விளையாட்டாக இருக்கிறது.

அதைவிட, இப்படியானதொரு நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ஷ உதாரணப்படுத்திக் கூறுவதற்கு ஒரு தமிழ்க்கட்சி கிடைத்ததே என்று தமிழ்மக்கள் வேதனைப் படுவதை விட வேறுவழியில்லை.

# முஸ்லிம்கள் தனித்தரப்பாக இல்லாது; பேச்சுக்களில் கலந்து கொள்ளமாட்டோம்!

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களில், முஸ்லிம் காங்கிரஸின் தலைமையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்காது போனால், தொடரும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை , கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சருமான - ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கட்சியின் அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் தெரிவித்துள்ளார்.

தற்போது இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசப்படுகின்றது. மீள் குடியேற்றம், புனர்வாழ்வு விடயங்களை மட்டும் அமுல்படுத்துவதற்காகவே இடைக்கால நிர்வாகம் ஒன்று வேண்டுமென ஆரம்பத்தில் கூறப்பட்டாலும், தற்போது பரிசீலிக்கப்படும் இடைக்காலசபை, முற்றுமுழுதானதொரு அதிகார அமைப்பைக் கொண்டதாக அமையப்போகின்றது. இவ்வாறான கட்டத்தில் ஏற்கனவே வாக்களிக்கப்பட்டவாறு, சமூகங்களிடையிலான அதிகாரப் பரவலாக்கல் விவகாரம் பரிசீலிக்கப்படும் போது, முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றும் வாய்ப்பு இனியும் அளிக்கப்படாவிட்டால், வேறு எப்போதுதான் அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், நடைபெற்ற அரசியல் உயர்பீடக் கூட்டத்தில், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனியாகப் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும், ரவூப் ஹக்கீம் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலியைப் பணித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், ஒரு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஐ.தே.க.வுடன் செய்து கொள்ள வேண்டுமென்று, ஹக்கீமின் அரசியல் அதியுயர்பீடம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய பாடசாலை அதிபர்கள் நியமிப்பு; நேர்முகப் பரீட்சை அடுத்த மாதத்தில்!

தேசிய பாடசாலைகளில் அதிபர்களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் - எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளதாக, கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ். தில்லை நடராசா தெரிவித்துள்ளார்.

இசுறுபாயாவிலுள்ள கல்வி அமைச்சில் எதிர்வரும் 5, 6, 7, 11, 12, 13, 19 ஆகிய ஏழு தினங்கள் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளன.

நாட்டிலுள்ள 80 தேசியப் பாடசாலைகளில் அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், இதற்கு 500 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேர்முகப்பரீட்சையின் போது, சேவைக்காலம், கல்வித் தகைமை, விஷேட தகைமைகள் என்பவற்றிற்கு விஷேட கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (122)

## ஐக்கிய நாடுகள் சபையின்

# பொன்விழாவில் கலந்து கொள்ள ரணில் அமெரிக்கா செல்வார்!

ஐக்கிய நாடுகள் சபையின் ஐம்பதாம் ஆண்டு நிறைவில் கலந்து கொள்வதற்காக - பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவிற்குச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்நிகழ்வில், கலந்து கொள்வதற்காகப் பிரதமர் - இலங்கையிலிருந்து செல்லவுள்ளார்.

செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி - மலேசியாவிற்குச் செல்ல, பிரதமர் - திட்டமிட்டிருந்தார். மலேசியாவிலிருந்து, நியூயோர்க் செல்லவும் அவர் தற்போது திட்டமிட்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்பாக ஆஜராகுமாறு பொலிஸ்மா அதிபருக்கு பணிப்பு!

(கொழும்பு)

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவைத் தமது அதிகாரிகள் முன்பாக ஆஜராகுமாறு, மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுள்ளது.

பொலிஸாரின் காவலிலுள்ள கைதிகள் ஐந்து பேர், மரணமான சம்பவம் தொடர்பாகவே, மனித உரிமை ஆணைக்குழு, இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

கடவத்த, தயாகல, கிரிண்டிவெல, மொனராகல, கொஸ்கம ஆகிய இடங்களிலுள்ள, சிறைச்சாலைக் கைதிகள் மரணம் தொடர்பாக, மனித உரிமை ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே, பொலிஸ்மா அதிபரை- மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முன் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் வைத்து, சித்திரவதை செய்யப்பட்டு, இந்த ஐவரும் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டுத் தமக்குக் கிடைத்ததாகவும், அதன் பேரிலேயே பொலிஸ்மா அதிபர் - ஆணைக்குழுவின் முன்பாக ஆஜராக வேண்டும் என, மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ராதிகா குமாரசாமி தெரிவித்துள்ளார்.

# ஊர்காவற் படையைச் சேர்ந்தவர் துப்பாக்கியை பறிகொடுத்தார்!

வெலிகந்த ருகுணுகெத கிராமத்தில் கடந்த 27 ஆம் திகதி 10.30 மணியளவில் - கண்களில் மிளகாய்த்தூளை தூவிவிட்டு, ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து ரி 56 ரகத் துப்பாக்கி அபகரித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏதோ சத்தம் கேட்கிறது என்று காவலரணில் இருந்து சென்று பார்க்கும் போதே, இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தத் துப்பாக்கியை எடுத்துச் சென்றவர் - இதுவரை இனங்காணப்பட்டவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிறப்பு, இறப்பு பதிவுகளுக்கு முல்லையில் நடமாடும் சேவை

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை காலமும், பதிவு செய்யப்படாத பிறப்பு, இறப்பு, திருமணங்களைப் பதிவுசெய்யும் நடமாடும் செயலமர்வு - எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்தச் செயலமர்வில், பொதுமக்களைப் பங்குகொள்ளுமாறு முல்லைத் தீவு மாவட்ட மேலதிகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம், கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் முதலாம் திகதி - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும்,

2 ஆம் திகதி அலம்பில் புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்திலும், எதிர்வரும் 3 ஆம் திகதி முல்லைத்தீவு நகரசபை கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

# கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சிறுவர் தின விளையாட்டுப்போட்டி!

சர்வதேச சிறுவர்தின விளையாட்டுப்போட்டிகள், இன்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டிக்கு, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமை தாங்கவுள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்கள் - இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்வில் - முதன்மை விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண சமூகசேவை சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் ஆர்.ரஞ்சினி கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (108, 122)

# இரண்டாவது விமான நிலையமும் தென்னிலங்கையில் நிறுவப்படும்!

## தென்மாகாண அமைச்சர் ஆனந்த குலரத்தின

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் தென்னிலங்கையில் அமையவுள்ளது. இதற்கான நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் ஆனந்த குலரத்தின தெரிவித்துள்ளார்.

நிர்மாணிக்கப்படவுள்ள விமான நிலையத்திற்கான காணிகள் இரு இடங்களில் தெரிவாகியுள்ளது. எந்த இடத்தில் நிர்மாணிப்பது என்பது தொடர்பாக இன்னமும் தீர்மானம் செய்யப்படவில்லை. அம்பாந்தோட்டையில் வெள்ளவாய, குடாஓயா, ஆகிய இடங்களே விமான நிலைய நிர்மாணிப்புக்கு தெரிவு செய்யப்பட்ட இடங்களாகும்.

புதிதாக அமையும் விமான நிலையம் 2000 ஹெக்ரயர் பரப்பளவினை உடையதாக இருக்கும். அமைக்கப்படவிருக்கும் விமானநிலையத்தின் ஆரம்ப மதிப்பீடுகளுக்கான பணிகள் 1.5 மில்லியன் டொலர் செலவில் இடம்பெறும் என மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மக்கள் விடுதலைமுன்னணியை திருப்திப்படுத்தி பொ.ஐ.மு ஆட்சியமைப்பதற்கு முயற்சிக்கிறது!

## தெற்குத்திசையினிலே

## கொழும்பிலிருந்து இந்திரஜித்



மக்கள் விடுதலை முன்னணி தென்னிலங்கையில் நடத்திய பேரணி வெற்றியுடன் முடிவடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி இதன்மூலம், தமது கட்சி செல்வாக்கை ஒருபடி உயர்த்தியுள்ளது. அத்துடன், பொதுஜன ஐக்கிய முன்னணியுடனான கூட்டுசேர் பேரம்பேசலில் பாரதூரமான பிரச்சினையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் ஆரம்ப ஸ்தாபகர் ரோகண விஜேவீரவின் வழிகாட்டலில், தீவிரவாத இடதுசாரி இயக்கமாகவே தம்மை இனம் காட்டிக் கொண்டன. ஆயுதப்போராட்டத்தில் அது ஈடுபட்டபோதும் - பொறுப்பில்லாத, ஆழ்ந்த சிந்தனையில்லாத அதன் செயற்பாடுகள் அந்த ஆயுதப்போராட்டங்களைத் தோல்வியடையச் செய்தன. அத்துடன், ஜே.வி.பி. எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி, இடதுசாரிக் கொள்கையிலிருந்து விலகிச் செல்வதாக, மக்கள் மத்தியில் எழுந்த சந்தேகமும் அதன் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. இறுதியாக, மக்கள் விடுதலை முன்னணி - அதன் ஸ்தாபகர் ரோகண விஜேவீரவை இழந்த பின்னர், பாரிய வீழ்ச்சிநிலைக்குச் சென்றது. அந்தக் கட்சியில் அங்கம் வகிக்கும் பலர் அதிலிருந்து விலகிக் கொண்டனர். ஆயினும், மக்கள் விடுதலை முன்னணியின் புதிய தலைமை சற்று நிதானப் போக்கைக் கடைப்பிடித்து, இன்று உறுதியானநிலைக்கு உயர்ந்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணி தமது இடதுசாரி கொள்கைகளில் இருந்து விலகியுள்ளமை, கட்சியின் செயற்பாடுகளுக்கு மாறுபாடான செயலாகும். ஆனால, அது தற்சமயம் கடைப்பிடிக்கின்ற தேசியவாதம் என்ற பெயரிலான, மூடிமறைக்கப்பட்ட இந்த இனவாதக்கொள்கை- கட்சியை வளர்ச்சியடையச் செய்துள்ளது. ரோகண விஜேவீரவை இழந்தபின்னர், மக்கள் விடுதலை முன்னணி முதலில் தமது நிதியாக்



கலைச் சிறப்பாகவே பலப்படுத்திக்கொண்டது. இதற்கு, லண்டனில் அடைக்கலம் தேடிக் கொண்ட அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் முழுமையான உதவியைச் செய்து வருகிறார். இந்த விடயத்தில் மக்கள் விடுதலை முன்னணி - தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் இயக்கங்களின் வழிகளைப் பின்பற்றியது என்றே சொல்லவேண்டும். இதனையடுத்து முன்னணியின் பிரசாரம் - முன்னரைக் காட்டிலும் வேகமாகச் செய்யப்பட்டு வருகின்றமை, கட்சிக்கு விசுவாசமானவர்களை அதிலிருந்து விலகிச்செல்ல முடியாதவாறு, மூளைச்சலவை செய்தல் போன்ற நடவடிக்கைகளே முன்னணியை முன்நகரச் செய்துள்ளது. முன்னர் ஒரு காலத்தில் தமது அழிவுக்குக் காரணமாகவிருந்த - சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பயன்படுத்தி, தற்போது மேலும் ஒருபடி முன்னேறியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதானமாகக கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி - மக்கள் விடுதலை முன்னணியைப் பயன்படுத்தி, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிவிடலாமென எண்ணம் கொண்டுள்ளது. ஆயினும், இது மக்கள் விடுதலை முன்னணிக்கே வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

தற்சமயம் 14 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கொண்டிருக்கும் மக்கள் விடுதலை முன்னணி இனிவரும பொதுத்தேர்தல் ஒன்றில் 20 ஆசனங்களுக்கு அதிகமான ஆசனங்களைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்குப் பிரதானமாக, இலங்கையின் தென்பகுதியை அது பயன்படுத்தி வருகிறது. சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் - தென்னிலங்கை மாவட்டங்களிலேயே படிப்பறிவுள்ளவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். அதேபோல, அங்கு தேசியவாதம் என்ற பெயரிலான மூடி மறைக்கப்பட்ட இனவாதம் காணப்படுகிறது. இது மக்கள் விடுதலை முன்னணிக்குச் சிறந்த வாய்ப்பபை ஏற்படுத்தி மெருகேற்றிவிட்டது. சாதாரண பொதுமக்களைக் காட்டிலும், ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் - பல்கலைக்கழகங்களிலும், தொழில்துறைகளிலுமே பாரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளன.

தமது கொள்கை ஊடுருவலுக்குச் சிறந்த இடங்களாக மக்கள் விடுலை முன்னணியினால் இவை தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தநிலையில், ஐக்கிய தேசிய அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் மற்றும் பொருளாதார சீரமைப்புக்களுக்கு எதிராக, மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபையைத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கவேண்டாம் எனவும், தனியார் மயமாக்கலுக்கு எதிராகவும் இந்தக் கட்சி ஏற்பாடு செய்திருந்த நீண்ட நடைப்பேரணி, எதிர்பார்த்த அளவு வெற்றியைத் தந்துள்ளது. இது அந்தக் கட்சியைப் பொறுத்தவரையில் அடுத்த அரசியல் நகர்வுக்கான காய்நகர்த்தலாகும். ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைமை- இங்கு கவலைக்குரியதே. ஆட்சியதிகாரத்தில் இருந்த ஒரு கட்சி, தமது நலனுக்குச் சிறிய கட்சி ஒன்றுடன் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. பொதுஜன ஐக்கிய முன்னணி மீண்டும் ஆட்சியில், அமர்ந்துவிடவேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் மக்கள் விடுதலையின் அனைத்துக் கோரிக்கைகளுக்கும் இசைவு தெரிவிக்கவேண்டிய நிலைக்கு வந்துள்ளமையையே இது காட்டுகிறது. அதுமட்டுமல்லாமல், இந்தப் பேரணியின் இறுதியில் பங்குகொண்டு, உரையாற்றிய பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க - தமது கட்சியில், அதாவது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களையே விமர்சனம் செய்தமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. நாடு பிரிவினையை நோக்கிச் சென்றுகொண்டிருக் கிறது. இந்தநிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர்- ஐக்கிய தேசியக் கட்சியிடம் பணத்தைப் பெற றுக்கொண்டு, அந்தக் கட்சிக்கு ஆதரவளித்து வருவதாக அநுரா பண்டாரநாயக்க குற்றம் சுமத்தினார். மறுபுறத்தில் ஜனாதிபதியும் இதே போன்ற நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகிறார். இலங்கையின் இனப்பிரச்சினைக் குத் தீர்வைக்காணவேண்டும் என்பதற்காக, நோர்வே நட்டை ஏற்பாட்டாளராக அழைத்தவர் ஜனாதிபதி. ஆனால், இன்று அதே ஜனாதிபதி - நோர்வேயை விலக்கிவிட்டு, பின்லாந்தைச் சமாதான ஏற்பாட்டாளராகக் கொண்டுவர முயற்சிக்கிறார்.



அண்மையில் பின்லாந்து நாட்டின் முன்னாள் ஜனாதிபதி - ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, இலங்கை வந்திருந்தார். இவர் இலங்கையில் சமாதான முயற்சிளுக்கு உதவும் வழிவகைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தார்.

இதன்போது, ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஆட்சியின்கீழ் மாத்திரமே, சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்பட அவர் விருப்பம் தெரிவித்ததாகப் பொதுஜன ஐக்கிய முன்னணித் தரப்புக்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சி - நடைமுறை சமாதான முன்னெடுப்புகளில் திறமையற்ற வழிவகைகளைக் கையாள்வதாகவே பின்லாந்து முன்னாள் ஜனாதிபதி கருதுவதாகவும், பொதுஜன ஐக்கிய முன்னணி தரப்புகள் கூறுகின்றன. ஜனாதிபதி - இலங்கையின் சமாதானத்துக்காகப் பின்லாந்தை அழைக்கவேண்டிய தன் அவசியம் என்ன? என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஜனாதிபதியினால் முன்னர் ஏற்பாட்டாளராக அழைக்கப்பட்ட நோர்வே - ஜனாதிபதியின் முற்போக்கற்ற தன்மைகளினால் சமாதான முயற்சிகளில் அவரைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. ஜனாதிபதிக்கும், அவரது கட்சிக்கும் அதிருப்திநிலையை ஏற்படுத்தியுள்ளது. இதுவே பின்லாந்தை அழைப்பதற்கான முதற்காரணமாகும்.


இரண்டாவதாக - நோர்வே ஏற்பாட்டாளர்களை மக்கள் விடுதலை முன்னணி ஏற்கனவே எதிர்த்து வந்தது. ஆரம்பத்தில், மக்கள் விடுதலை முன்னணியின் இந்த எதிர்ப்பைப் பெரிதும் பொருட்படுத்தாத ஜனாதிபதி - தற்சமயம் மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்புக்கு அடிபணிந்துள்ளார். இதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் நகர்வுகளும், வேகமான செயற்பாடுகளுமே காரணங்களாகும். நோர்வே ஏற்பாட்டாளர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும், போர்நிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென, பொதுஜன ஐக்கிய முன்னணி - முன்னர் மக்கள் விடுதலை முன்னணிக்கு நிபந்தனை விதித்தது. அவ்வாறு முடியாவிட்டால், கூட்டமைப்புப் பற்றிய பேச்சுக்கு இடமில்லை என அது எச்சரித்திருந்தது. ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்த்துக்கொண்டால்தான், தாம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றமுடியும் என்ற நினைப்பில், பொதுஜன ஐக்கிய முன்னணி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இதனடிப்படையில், மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்பு தெரிவித்த நோர்வே ஏற்பாட்டாளரை, இன்று பொதுஜன ஐக்கிய முன்னணியும் எதிர்க்கும்நிலைக்கு ஆளாகியுள்ளது. பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி - இலங்கையின் ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரின் நண்பராவார். இவர் கொசோவோ, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, பின்லாந்து ஏற்பாட்டாளரை ஒழுங்கு செய்வதன்மூலம், தமது எதிர்கால கூட்டமைப்பின் பங்காளரான மக்கள் விடுதலை முன்னணியைத் திருப்தி கொள்ளச் செய்யலாம் என எதிர்பார்க்கிறது. ஆயினும், மக்கள் விடுதலை முன்னணி இன்னும் தமது கருத்தை வெளியிடவில்லை.

இதற்கிடையில் - பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் தமது அரசாங்கத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்போகும் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பில் தீர்மானம் ஒன்றுக்கு வந்துள்ளது. தற்போதைய போர்நிறுத்த உடன்பாட்டைப் போலல்லாது, தமது ஆட்சியின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் போர் நிறுத்த உடன்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டுப்படுத்தி வைக்கப்படுவர் என்பதே அந்த தீர்மானமாகும். எதிர்க்கட்சிகளின் நிலை அவ்வாறு இருக்க, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்தகாலநிலை - முரண்பாடுகளைக் கொண்டதாகவே இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஒன்று பிரதமரின் தலைமையில், கடந்த வாரம் இடம் பெற்றது. இதன்போது, அமைச்சர்களைக் கணகாணிப்பதற்கு, அமைச்சர் மிலிந்த மொறகொடவின் தலைமையில், 5 பேரைக்கொண்ட குழு ஒன்றைப் பிரதமர் நியமித்தார். இதில் பிரபல தொழிலதிபர் கென் பாலேந்திரா உட்



பட்டோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தநிலையில்தான், பிரதமர் இந்தக் குழுவை அமைத்தமை தொடர்பில் அமைச்சர்கள் மத்தியில் எதிர்ப்பு அலை கிளம்பியுள்ளது.

எஸ்.பி.திஸநாயக்க, கரு ஜெயசூரிய, ரிரோன் பெர்ணாண்டோ ஆகியோர் இந்த எதிர்ப்பலையை ஏற்படுத்தியுள்ளனர். எனினும், இதற்கு இன்னும் பிரதமரால் தீர்வு காணப்படவில்லை.

எனவே, இந்தப் பிரச்சினை தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி-தேர்தல் அல்லது மாற்று அரசாங்கம் எனக் கொண்டிருந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் நிபுணர்கள் - சம்பள உயர்வுகளை வழங்கி, மீக்களை மீண்டும் தம் வசப்படுத்த முயற்சித்து வருகிறது.

ஆயினும், நடைமுறை நிதிச் சிக்கலில் அதற்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

நாட்டில் நாள்தோறும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்களும் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தலை விடுத்துக்கொண்டேயிருக்கும்.

### பரென்ற்ஸ் கடலில்

# ரஷ்யாவின் நீர்மூழ்கிக்கப்பல் 10 பணியாளர்களுடன் மூழ்கியது!



ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலொன்று 10 பணியாளர்களுடன் பரென்ற்ஸ் கடலில் மூழ்கியுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. இதில் ஒருவர் காப் பாற்றப்பட்டதாகவும், இன்னொருவ ரது உடல் மீட்கப்பட்டுள்ளதாகவும் இன ரபாக்ஷ் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

நீர்மூழ்கிக்கப்பலுடன் மூழ்கிய வர்களை, உயிருடன் காப்பாற்று வது குறித்து நம்பிக்கை குறைந்துள் ளதாக, கடற்படை அதிகாரி விக்டர் கறவ் சென்கோ தெரிவித்துள்ளார்.

1959 ஆம் ஆண்டு இந்த நீர்மூழ் கிக்கப்பல் சேவையிலிருந்து நிறுத் தப்பட்டதாகவும், அதனுள் அமைந் திருந்த - இரு அணு உலைகளின் செயற்பாடு நிறுத்தப்பட்டு விட்ட தாகவும், இதனால், அணுக்கதிர் கசிவிற்கான சாத்தியங்கள் இல்லை எனவும், அந்த அதிகாரி தெரிவித் துள்ளார். இதனுள் அமைந்திருந்த இரண்டு உலைகளையும் அகற்றுவ தற்கும், அந்தக் கப்பலை பிரிப்ப தற்குமாகவே இழுத்துச் செல்லப் பட்டபோது, இந்த விபத்து நடந்த தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு கூக்ஷ் என்ற நீர்மூழ்கிக்கப்பல் - இதே கடலில் மூழ்கியபோது, 118 பணியாளர்கள் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டம்!

நேபாளத்தின் தலைநகர் காத் மண்டுவில் - மாவோ தீவிரவாதிகள் 7 மாத போர்நிறுத்தத்திற்கு பின், போரை ஆரம்பிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, 10 ஆயிரத்துக்கும் மேற் பட்ட மக்கள், பரந்தளவில் சமாதா னத்திற்கான ஊர்வலங்களை நடத்தி வருகின்றனர். இந்த ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், பெண்கள் மனிதநேய அமைப்பைச் சேர்ந்தவர் கள், ஆகியோர் பங்குபற்றினர்.

# நஜாப் குண்டுவெடிப்பு தொடர்பாக நான்கு சந்தேக நபர்கள் கைது!



ஈராக்கின் நஜாப் நகரில் வெள் ளிக்கிழமை நடந்த கார்க் குண்டு வெடிப்பில் 87 பேர்வரை கொல்லப்ப ட்டது தொடர்பாக, இதுவரை நால் வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அல் - கொய்டா தீவிரவாதி களுக்கும், கைதுசெய்யப்பட்டவர்க ளுக்கும் தொடர்பிருப்பதாக, பொலி ஸார் தெரிவித்திருந்தார்கள்.

கொல்லப்பட்டவர்களின் மரணச் சடங்குகளை, அவர்கள் மரணம டைந்த இடமான - ஷியா முஸ்லிம் பள்ளிவாசலில் நடத்துவதற்கு ஒழுங் குகள் செய்யப்பட்டிருந்தன.

கொல்லப்பட்டவர்களில் - ஈராக் கின் ஷியா முஸ்லிம் அரசியல் தலைவர் அயத்துல்லா மொகமட் பகுர் அல் - சகிம்மும் அடங்குவர்.

பதவியிலிருந்து விலக்கப்பட்ட சதாம் ஹுசைனுக்கும், அமெரிக்கா விற்கும் எதிராக கோஷங்கள் எழுப் பப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் செய லாளர் கோபி அனான், ஈராக்கின் அரசியல் மதத்தலைவர்கள் அமை தியைப் பேணுமாறு கேட்டுள்ளார்.

கொல்லப்பட்ட அரசியல் தலை வர் அயத்துல்லா சகிம், 20 ஆண் டுகள் ஈரானில் அரசியல் தஞ்சம்கோரி யிருந்தமையும், சதாமின் வெளியேற் றத்தின் பின் - நாடு திரும்பியமை யும், குறிப்பிடத்தக்கதாகும். அவரின் மரணத்திற்கு அமெரிக்கப்படைகள் ஈராக்கில் பாதுகாப்பு நிலையை சீர் படுத்தாததே காரணமென தெரிவித் திருந்தது.

# மீட்புநிதி மீளளிப்பு தொடர்பான விபரம்

தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான, கடன் மீளளிப்பு நிகழ்வு ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முகமாலை நுழைவாயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கூடத்தில் வைத்து, காலை 8 மணி முதல் வழங்கப்படவுள்ளது.

**யாழ்.மாவட்டம்**
**இடம்: முகமாலை நுழைவாயிலிருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்**
**நேரம்: காலை8 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை**

| 16.09.2003 (செவ்வாய்) | 17.09.2003 (புதன்) | 18.09.2003 (வியாழன்) |
|---|---|---|
| நல்லூர் | மானிப்பாய் | கரவெட்டி |
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை, சங்கானை | பருத்தித்துறை |
| கோப்பாய் | காரைநகர், வேலணை | வடமராட்சி கிழக்கு |
| உடுவில் | பச்சிலைப்பள்ளி | சாவகச்சேரி |

இதேவேளை - வன்னி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கீழ்குறிப்பிட்ட இடங்களில் மீளளிப்பு கொடுப்பனவு பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

20.09.2003 (சனி)

| | | | |
|---|---|---|---|
| பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | - | நல்லூர் - பூநகரி | காலை 08.30 மணி |
| முழங்காவில் மகா வித்தியாலயம் | - | முழங்காவில் | மு.ப.9.45 மணி |
| விடத்தல்தீவு றோ.க.பாடசாலை | - | விடத்தல்தீவு | மு.ப.11.00 மணி |
| கறுக்காய்க்குளம் அ.த.க. பாடசாலை | - | கறுக்காய்க்குளம் | ந.ப.12.00 மணி |
| மல்லாவி மத்திய கல்லூரி | - | மல்லாவி | பி.ப.03.30 மணி |
| அக்கராயன் மகா வித்தியாலயம் | - | அக்கராயன் | மாலை 5.00 மணி |

21.09.2003 (ஞாயிறு)

| | | | |
|---|---|---|---|
| மாங்குளம் மகா வித்தியாலயம் | - | மாங்குளம் | காலை 8.00 மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - | புளியங்குளம் | காலை 8.30 மணி |
| நெடுங்கேணி மகா வித்தியாலயம் | - | நெடுங்கேணி | மு.ப.9.30 மணி |
| ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் | - | ஒட்டுசுட்டான் | மு.ப.10.15 மணி |
| வித்தியானந்தாக் கல்லூரி | - | தண்ணீரூற்று | மு.ப.11.30 மணி |
| ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் | - | புதுக்குடியிருப்பு | பி.ப.12.15 மணி |
| விசுவமடு மகா வித்தியாலயம் | - | விசுவமடு | பி.ப.1.30 மணி |
| கிளிநொச்சி மத்திய கல்லூரி | - | கிளிநொச்சி | பி.ப.2.45 மணி |

# மீட்புநிதி கடன் சான்றிதழ் தவறவிட்டோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிக் கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்கள் - இந்த ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில், தமது பெயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதா? என்பதை அறிந்துகொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

மீட்புநிதிக் கடன்சான்றிதழைத் தவறவிட்டவர்கள் கீழ்வரும் இடங்களில், குறித்த நாட்களில் பார்வையிட முடியும் என தமிழீழ நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் தெரிவித்துள்ளார்.

07.09.2003 (ஞாயிறு)

| | | | |
|---|---|---|---|
| அரசியற்துறைச் செயலகம் - | மானிப்பாய் | காலை | - 08.00 - 09.30 மணி |
| அரசியற்துறைச் செயலகம் - | சண்டிலிப்பாய் | மு.ப. | - 10.00 - 11.30 மணி |
| அரசியற்துறைச் செயலகம் - | சுன்னாகம் | ந.ப. | - 12.00 - 01.30 மணி |
| அரசியற்துறைச் செயலகம் - | நீர்வேலி | பி.ப. | - 02.00 - 03.30 மணி |

08.09.2003 (திங்கள்)

| | | | |
|---|---|---|---|
| அரசியற்துறைச் செயலகம் - | வல்வெட்டித்துறை | காலை | - 08.00 - 09.30 மணி |
| அரசியற்துறைச் செயலகம் - | தம்பசிட்டி | மு.ப. | - 10.00 - 11.30 மணி |
| அரசியற்துறைச் செயலகம் - | கரவெட்டி | பி.ப. | - 12.00 - 01.30 மணி |

09.09.2003 (செவ்வாய்)

| | | | |
|---|---|---|---|
| அரசியற்துறைச் செயலகம் - | கைதடி | காலை | - 08.00 - 09.30 மணி |
| அரசியற்துறைச் செயலகம் - | சங்கத்தானை | மு.ப. | - 10.00 - 11.30 மணி |
| அரசியற்துறைச் செயலகம் - | நல்லூர் | பி.ப. | - 02.30 - 04.00 மணி |

10.09.2003 (புதன்)

| | | | |
|---|---|---|---|
| அரசியற்துறைச் செயலகம் - | வேலணை | காலை | - 08.00 - 09.00 மணி |
| வீரசிங்கம் மண்டபம் - | யாழ்ப்பாணம் | மு.ப. | - 11.00 - 02.00 மணி |

11.09.2003 (வியாழன்)

| | | | |
|---|---|---|---|
| மத்திய கல்லூரி - | கிளிநொச்சி | பி.ப. | - 02.45 - 04.00 மணி |

# பிரேசில் காட்டுப் பகுதியிலிருந்து 849 அடிமை தொழிலாளர் மீட்பு!

(பகியா)

பிரேசிலில் - பகியா என்ற பகுதி யில் அமைந்துள்ள கோப்பித் தோட் டங்களில் அடிமைகளாக வேலைக் கமர்த்தப்பட்டிருந்த 849 வேலையாட் களை - பிரேசில் அதிகாரிகள் விடு வித்துள்ளனர்.

அமேசன் காட்டுப் பகுதியில் அடிமைத் தொழிலாளர்களாக வைக் கப்பட்டிருந்தவர்களில் - இந்த ஆண் டில் மட்டும் இதுவரை 2000 இற்கும் அதிகமானவர்கள் விடுவிக்கப்பட் டுள்ளனர்.

சென்ற மார்ச் மாதம் பிரேசிலில்- வேலைக்கு ஆட்கள் அடிமையாக அமர்த்தப்படுவதை தடைசெய்யும் சட்டம் உருவாக்கப்பட்டது.

இதன் ஒருகட்டமாக - கோப்பித் தோட்டமொன்றை அதிகாரிகள் திடீ ரென முற்றுகையிட்டபோது, மேற்படி 849 அடிமைத் தொழிலாளர்களும் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்களை- பிரேசில் அதிகாரிகள் மீட்டதோடு, அவர்கள் அனைவரும் விடுவிக்கப் பட்டனர்.

கோப்பித் தோட்டத்தை முற்று கையிட்டபோது, அடிமைத் தொழி லாளர்களில் 70 இற்கும் அதிகமான வர்கள் நோயாளிகளாகக் காணப் பட்டனர்.

அவர்களைச் சொந்த இடங்க ளுக்கு அனுப்பிவைப்பதற்கான சகல வசதிகளையும் - வேலைக்கு அமர்த்தியவர்களே செய்யவேண்டும் என்று, அதிகாரிகள் கட்டளையிட் டுள்ளார்கள்.

### ஈராக்கின் அணுவாயுத குறிப்பு

# பி.பி.சிக்குக் கசிந்தது தொடர்பாக பிரிட்டன் பாதுகாப்பு சேவை விளக்கம்!

ஈராக்கின் ஆயுதங்கள் தொடர் பான குறிப்புக்கள் எவ்வாறு பி.பி.சி செய்தியாளருக்கு கிடைத்தது என பதை, பிரித்தானியாவின் பாதுகாப்பு சேவையான எம்-15 அறியவுள்ள தாக - கற்றன் விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட தொடர் செய்திகளை ஆராய்வதற்கு, பாதுகாப்புச் சேவை தீர்மானித்துள் ளது.

130 பக்கங்களைக் கொண்ட பத் திரம், அண்மையில் கணினி வலைப் பின்னலூடாக வெளியிடப்பட்டிருந்தது. அதில் - ஈராக்கிய ஆயுத நிபுணர் டேவிட் கெலி, தனது பத்திரிகை நண்பருக்கு தன்னைச் சந்திப்பதற்கு பொருத்தமான நேரமல்ல எனக் குறிப்பிட்டிருந்தார் எனவும்,

இதன்மூலம், டேவிட் கெலி மீது சந்தேகம் எழுந்திருந்தமை தெரிய வந்துள்ளது. மேலும், ஈராக்கின் ஆயுதங்கள் தொடர்பான ஆழமான அறிவை அவர் கொண்டிருந்தார் என் பதும் - இதன்மூலம் டேவிட் கெலி தான் அந்த மனிதர் என, மறைமுக மாக தெரிவித்திருந்ததாகவும், அண் மையில் வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவிக்கப்படுகிறது.





THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1 இல் இருந்து மேற் படிப்பு வரை சிறந்த ஆசிரியர் கள், சகல பாடங்கள்.
426 (302), K.K.S. Road, Jaffna. (சி-1296)

தேவை
விற்பனைப் பிரதிநிதி தேவை.
மில்க்வைற்
த.பெ.இல.77
(சி-1302) யாழ்ப்பாணம்.

சிறுவிளம்பரம்

நாய்க்குட்டி விற்பனைக்கு
2 1/2 மாதம் நிரம்பிய நல்லின டாஸ்கவுண்ட் (Dashound) நாய்க் குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு 70(34), கோவில் வீதி, யாழ்ப்பாணம். T.P 222 5401. (465)

மணமகள் தேவை
யாழ்.நகரில் பிறந்த 33 வயது டைய, கௌரவமான, கனடா பிர ஜையுமான தம்பிக்கு- நல்லொழுக் கம் மிக்க மணமகளை சகோதரன் எதிர்பார்க்கின்றார். தொடர்பு:- பிள்ளை "LOSAN INN' முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி 222 5032. (சி-1417)

காணி விற்பனைக்கு
அளவெட்டி குருக்கள் கிணற் றடிப் பிள்ளையார் கோவிலிற்கு மேற்கே 15 பரப்புக் காணி விற்ப னைக்குண்டு. தொடர்பு:- நடராசா தவேந்திரம், 568/1 கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பா ணம். (466)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

பிரசன்னா
கணனிக் கல்வி நிலையம்
K.K.S. வீதி, சுன்னாகம்
எமது நிலையத்தில் குறைந்த கட்டணத்தில்
பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள் · றோணியோ வேலைகள்
Printing (Lazer, Dotmatic and Colour) · Scanning
CD Writing (Mp3, Audio, Video)
News Paper Advertisment Designing
Computer Sales & Repairing
Prashannaa CSC Graphics

# வெளிச்சத்துடன் கரையேற வேண்டு[ம்] மீனவர்களுக்கு படையினர் கட்டுப்பாடு

தென்மராட்சி - கோயிலாக்கண்டி கடல்நீரேரியில் அதிகாலை 4 மணி முதல் மீன்பிடிக்க படைத்தரப்பு அனுமதி அளித்துள்ளது. எனினும், மீனவர்கள் கரையேறும்போது - கட்டாயமாக வெளிச்சத்தோடு திரும்ப வேண்டுமெனக் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் - படையினருடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே, படையினர் இந்த நிபந்தனையை விதித்துள்ளனர்.

எனினும், மீனவர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்ளமுடியாதென எதிர்ப்புத் தெரிவித்தனர். கடலில் விளக்கு வெளிச்சம் வைத்திருப்பது பிரச்சினையானது. வெளிச்சத்துடன் கரையேறுவது என்பது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது எனவும், மீனவர்கள் தெரிவித்தனர்.

மீனவர்களின் கருத்து[க்]களை ஏற்றுக்கொள்ளாத படையினர்- 'ரோச் லைட்' வெளிச்சத்துடனாவது கரையேறவேண்டுமென உத்தரவி[ட்]டன[ர்].

இதேவேளை - கொழும்புத்துறை அரியாலைப் பகுதி மீனவர்க[ள்] கோயிலாக்கண்டி கடல்நீ[ரேரி]யி[ல்] மீன்பிடித் தொழிலில் ஈடுப[டு]தா[க] சாவகச்சேரி பிரதேச செயல[ர்] [ஸ்]ரீ[நி]வாசன் தெரிவித்தார்.

## 'விடுதலைப் புலிகள்' வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்', இன்று வெளிவருகிறது.

வழமையான அரசியல் விடயங்கள் மற்றும் பல்வேறு அம்சங்களுடன் இந்த ஏடு வெளிவருகிறது.

# மன்னார் - மடு வீதியில் புத்தவிகாரை அமைப்பு!

(மன்னார்)

மன்னார் - மடுவீதிக்கருகாமையில், புதிதாக பௌத்தவிகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மன்னாருக்குச் செல்லும் மடு வீதிச் சந்தியில் - ஏற்கனவே, மடுமாதாவின் சொரூபம் ஒன்று உள்ளது. எனினும், அந்த இடத்திற்குச் சிறிது தூரத்திலேயே - இந்தப் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு, கடந்த 29 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று - பௌத்த விகாரைகள், மன்னார் வீதியில் பல்வே[று] இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன[மை] குறிப்பிடத்தக்கது.

# படுகொலை செய்யப்பட்ட தமிழர் நினைவாக மட்டக்களப்பில் செவ்வாயன்று துக்கதினம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த இரு தசாப்த காலத்தில்- சிங்களப்படைகளாலும், முஸ்லிம் ஊர்காவற்படைகளாலும் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களை நினைவுகூரும் முகமாகவே, துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மேற்படி துக்கதின நிகழ்வினை, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

நேற்று, மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்காத வகையில் - துக்கதினம் அனுஷ்டிப்பது என்றும், அன்றைய தினம் - பாடசாலைகள், பஸ்வண்டிகள், பொதுஇடங்கள், வீடுகளில் கறுப்புக்கொடிகள் பறக்க விடுவதோடு, பாடசாலை மாணவர், ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து - கடமைக்குச் செல்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

1990 ஆம் ஆண்டு - முஸ்லிம் ஊர்காவற்படையினர் மற்றும் இராணுவத்தினரால் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு, மாவட்டத்தில், கடந்த் காலங்களில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்மக்களை நினைவு கூரும் நிகழ்வொன்று, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றத்தினால், ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வு - கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவுகூரும் முகமாக- நினைவுத்தூபி ஒன்றும், அன்றைய தினம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்விற்கு - நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமை தாங்கும் அதேவேளை- கல்விமான்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இன்று வீரவணக்கக் கூட்ட[ம்]

சுவிற்சர்லாந்தில் சுகவீனம் காரணமாக சாவடைந்த - நாட்டுப்பற்றாளர் மார்க்கண்டு கருணாநிதியின் வீரவணக்கக்கூட்டம், நாளை நடைபெறவுள்ளது.

முன்னதாக - மீசாலை தெற்கிலுள்ள அவரது இல்லத்தி[லிரு]ந்[து] திருவுருவப்படம், மீசாலை வி[க்கி]னேஸ்வரா வித்தியாலத்திற்கு எடுத்து வரப்பட்டு, அங்கு காலை பத்து மணிக்கு நினைவஞ்சலிக்கூட்டம் நடைபெறவுள்ளது.

# சுகாதார சேவையினர் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தில்?

(கொழும்பு)

சுகாதாரசேவை தொழிற்சங்கங்கள், மீண்டும் ஒருமுறை வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

சம்பள முரண்பாடு தொடர்பான, பரிந்துரைகள் அமைச்சருடனான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பாக, வெளியிட்ட அறிக்கைகள் - திறைசேரிக்கும், தொழிற்சங்கத்திடமும் வழங்கப்படவேண்டும்.

ஆனால், தொழிற்சங்கத்திடம் அறிக்கை வழங்கப்படாமையை எதிர்த்தே - சுகாதாரசேவை தொழிற்சங்கம் போராட்டத்தில் குதிக்கவுள்ளது.

சம்பள உயர்வு தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கவேண்டியது - திறைசேரியேயாகும். திறைசேரியிடம் கொடுக்கப்பட்ட அறிக்கைக்கு ஏற்ப - திறைசேரி ஏற்றுக்கொண்ட பின்னர், அந்த அறிக்கையை சுகாதாரசேவை தொழிற்சங்கத்திடம் வழங்குவதே நன்மை பயக்கும். அதன் காரணமாகவே, சங்கத்திடம் அறிக்கை வழங்கப்படவில்லை என்று காரணம் கூறப்படுகின்றது.

## உருத்திரகுமாரன் கைதுசெய்ய...

சட்டத்தின்கீழ் கடுமையான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதன்படி அமெரிக்க அரசால் தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட இயக்கங்களுக்கு உதவிசெய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்றும் - அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையிலேயே கொழும்பிலுள்ள சில ஊடகங்கள், தமிழீழ விடுதலைப்புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன் அமெரிக்கா திரும்பும்பொழுது கைது செய்யப்படலாம் என செய்தி வெளியிட்டிருந்தன.

அமெரிக்காவின் தேசப்பற்று சட்டத்திற்கு எதிராக, லொஸ் ஏஞ்சலைச் சேர்ந்த மனிதாபிமான சட்ட அமைப்பும், நியுயோர்க்கை சேர்ந்த உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும், அமெரிக்க தமிழர் அமைப்புக்களும், இணைந்து கடந்த புதன் கிழமை வழக்குத் தாக்கல் செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## யாழ்ப்பாணத்தில்...

பிரயோகம் செய்வோம் என்று ஜே.வி.பியினர் எதிர்பார்த்தனர். நாங்கள் அப்படிச் செய்யவில்லை. மாறாக ஜே.வி.பி. இப்படியான பாதயாத்திரை மேற்கொள்ளும்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்குகிறோம் என்று உள்நாட்டு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் பாதயாத்திரை இடம்பெற்றபோது, போக்குவரத்திற்கு இடையூறு இடம்பெற்றதென்றும் அவர் கூறினார்.

## சு.க.-ஜே.வி.பி.கூட்டணி...

ஏற்கனவே இரு பகுதியினருக்கும் இடையே நடந்த சந்திப்பில் நோர்வே நாட்டினை சமாதான திட்டத்திலிருந்து அப்புறப்படுத்துமாறு ஜே.வி.பி கோரியிருக்கிறது. இதற்கு ஜனாதிபதியும் ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

இனிவரும் சந்திப்பிலும் நோர்வேயை அகற்றும் திட்டமே முன்வைக்கப்படுமெனவும், 7 ஆம் திகதிக்கு முன் அடுத்த சந்திப்பு இடம்பெறுமெனவும் அந்தப் பேச்சாள[ர்] மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் - அநுரா பண்டாரநாயக்க, ஜே.வி.பியின் நான்கு நாள் பாதயாத்திரையின் இறுதிநாளில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, தற்போதைய அரசாங்கம் இன்னும் ஆறுமாத காலத்தில் ஆட்டம் காணும் என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(01)

## வேலைநிறுத்தம்...

குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மூன்றாம் நிலை கல்வி அமைச்சர் கபிர் காசிம், கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டு முன்னணி அங்கத்தவர்கள் மற்றும் அமைச்சுக்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கல்விசாரா ஊழியர்கள் முன்வைத்த சம்பள உயர்வு தொடர்பாக, நீண்டநேரம் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதற்கமைய பல்வேறு வகைப்பட்ட அளவுகளில் சம்பளம் பெறும் 4500 ஊழியர்களுக்கு ஏற்கனவே பெற்றுக்கொடுக்கப்பட்ட 1000 ரூபாவுக்கு மேலதிகமாக 150 ரூபாவை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவு செம்ரெம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை வழங்கப்படுமென்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

(01)

## மன்னார் - மடு வீதி...

மேற்படி சந்திப்பில், ஒஸ்ரின் பெர்ணான்டோ, சில நிபந்தனைகளின் அடிப்படையில் மடு வீதியை திறக்க முடியுமெனவும், விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை இந்த வீதியால் கொண்டுசெல்ல இராணுவத்தினரிடம் முன்கூட்டியே அனுமதிபெற வேண்டுமெனவும் கூறினார்.

இதற்கு கண்காணிப்புக் குழுவினர் இதுபற்றி தாம் மக்களுடன் கதைப்பதாகத் தெரிவித்தனர்.

நேற்று மக்களைச் சந்தித்த கண்காணிப்புக்குழுவினர் - படைத்தரப்பினரின் அறிவித்தலை தெரியப்படுத்தினர். இதன்பின் இந்தப் பாதை வழியே யாத்திரிகர்களை மடுக் கோயிலுக்கு வரவிடாது தடுத்த மக்கள், யாத்திரிகர்களை செல்ல அனுமதித்தனர்.

மக்களுடன் கலந்துரையாடிய விடயங்களை, கண்காணிப்புக்குழுவினர் - எதிர்வரும் திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் கதைத்து, பாதை திறப்பது சம்பந்தமான இறுதிமுடிவினை எடுப்பர் எனத் தெரியவருகிறது.

இந்தப் பாதையினைத் திறப்பதற்கு மடுப்பகுதியைச் சேர்ந்த ம[க்]கள் ஆர்ப்பாட்டம் நடத்தியமையு[ம்] விடுதலைப் புலிகள் கண்காணிப்பு[க்] குழுவினரிடம் கோரிக்கை விடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வீரவணக்கக் கூட்டமும் அஞ்சலி நிகழ்வும்

நாட்டுப் பற்றாளர்

## மார்க்கண்டு கருணாநிதி


(யாழ்.பல்கலைக்கழக பொருளியல் சிறப்புப் பட்டதாரி
உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு
கல்விச் சேவை பரீட்சைப் பொறுப்பாளர் -சுவிற்சர்லாந்து)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17-08-1960 | 22-06-2002 |

சுவிஸ் வாழ் தமிழ்ச்சிறார்களின் தமிழ் மொழிக் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்தவரும், தமிழீழ தேசியத் தலைவரினால் நாட்டுப்பற்றாளர் எனக் கௌரவிக்கப்பட்டவரும், கல்விப் பணியில் இருந்தபோது திடீர்ச் சுகயீனம் காரணமாகக் கடந்தவருடம் 22.06.2002 அன்று எம்மை விட்டுப் பிரிந்தவருமான நாட்டுப்பற்றாளர் மார்க்கண்டு கருணாநிதி அவர்களுடைய வீரவணக்கக்கூட்டமும் அஞ்சலி நிகழ்வும்

இடம் :- மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்
காலம் :- 01.09.2003 திங்கட்கிழமை
நேரம் :- காலை 10 மணி

எல்லோருடைய விளக்குகளும்
அணைய வேண்டியதே
அவை எரிந்த காலத்தில் எத்தனை
ஊருக்கு வழிகாட்டின என்பதே முக்கியம்
அதற்கிணங்க சிறார்களுக்கு
தமிழ்மொழி வளர்த்த அண்ணனின்
அஞ்சலி நிகழ்விற்கு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.



நாட்டுப் பற்றாளர்
மார்க்கண்டு கருணாநிதி
(யாழ்.பல்கலைக்கழக பொருளியல் சிறப்புப் பட்டதாரி உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச் சேவை பரீட்சைப் பொறுப்பாளர்) சுவிற்சர்லாந்து

உலகத்தமிழ் ஒருங்கிணைப்புக் குழு
கல்விச் சேவை
சுவிற்சர்லாந்து.

(467)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது